உ

சிவமயம்.

திருக்கடவூர்

உய்யவந்ததேவநாயனார்

அருளிச்செய்த

# திருக்களிற்றுப்படியார்மூலமும்

திருவாவடுதுறையாதீனம்

தில்லைச்சிற்றம்பலவனெனும்

சிவப்பிரகாசனார்செய்த உரையும்.

இவை,

காஞ்சிபுரம்

மகாவித்துவான்

## கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

## கா. சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

## க. முருகேசமுதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# திருக்களிற்றுப்படியார் வரலாறு.

ஞானசாத்திரம் பதினான்கினுக்கு முன்னுண்டாய திருவுந்தியாரை யருளிச்செய்த உய்யவந்த தேவநாயனாரது மாணாக்கர் திருவிசலூர் ஆளுடைய தேவநாயனார், அவர் மாணாக்கர் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்.

இவர் பெரும்பற்றப்புலியூரி லெழுந்தருளியிருக்கு நாளில் மிகுந்த பக்குவமுடையாரொருவர் தன்னைக் கண்டெரிசிக்க அவருக்குச் சிவதீக்ஷைசெய்து அவர்சந் தேகவிபரீத மகலவதாயும் சிவானுபூதிச்செல்வத்தை யிடைவிடாம லனுபவிப்பதாயுந் தனதுபரமாசாரியார்செய்த திருவுந்தியாரின் கருத்தை விளக்கக்காட்டுவதாயும் நூறுவெண்பாவி லோர்சாஸ்திரஞ்செய்தனர்.

அச்சாத்திரத்தை விசுவத்துள்ளா ரங்கீகரித்துய்யும்படி திருவம்பலத்திற்சென்று நடேசரைத்தியானித்துத் தாமருளிச்செய்த திருவெண்பாவை நடேசர் முன்னிருக்கப்பெற்ற திருக்களிற்றுப்படியில் வைத்தருளினர். அத்திருக்களிறானது கைநிமிர்த்து இச்சாத்திரம் நடேசர் திருவடியடைவோர்க் கெளிதாகிய கருவியென அங்குள்ளாருணரும்படி நடேசர் திருவடியில்வைத்தருளியது

அப்போதங்குள்ள தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், திருப்பணடைவீட்டெழுநூற்றுமட்டத்து முதலிகளும் மகேஸ்வரர் நாற்பத்தெண்ணாயிரவரும் திருக்கோயினிமித்தஞ்செய்யும் திருப்பேரேழாயிரத்துத் தொளாயிரவரும், இத்திருப்பணடவீட்டி லெழுந்தருளியிருக்கும் கலவியாணர்களுங் கண்டதிசயித்திந்நூலுக்குத் திருக்களிற்றுப் படியென்னும் காரணப்பெயரிட்டருளினர்

இந்நூற்குமுன்னொருவர் திருவெண்காடுடையார் காரணமாய உரைசெய்தனர் அவ்வுரை இச்சாத்திரக்கருத்துக் கமையாததால் திருக்கதிதேவநாயனார் பரியாயத்தில் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர் திருவடியாரில் திருவாவடுதுறையில் தில்லைச்சிற்றம்பலவர் சிவப்பிரகாசர் முன்னூற்கும் இந்நூற்குமாறுபாடின்றி உரைசெய்தருளினர்.

இந்நூல் தில்லையம்பலத்தில் நடேசராலங்கீகரிக்கப்பட்டதாயும் அதிபக்குவமுடைய மாணுடாக்கெளிதி லுணரப்படுவதாயும் சைவசித்தாந்த சாஸ்திரங்களின் கருத்தைக் கரதலாமலகம்போற் சுருக்கியுணர்த்துவதாயுமிருப்பதால் இதைப்பத்தி சிரத்தையுடன் மனனஞ்செய்பவர்கள் ஜனனசாகரத்தை நீங்கி மோக்ஷமென்னுங் கரையேறுகை உண்மை! உண்மை!! உண்மை!!!

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்களிற்றுப்படியார்.

வெண்பா,

அம்மையப்பரே யுலகுக் கம்மையப்ப ரென்றறிக
வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப - ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லார்போ னிற்பா ரவர்.

இ-ள், அம்மையப்பரே யுலகுக் கம்மையப்பரென்றறிக = மாணவகனே சங்காரமான காலத்து மலசத்திரான மூன்றுவகைப்பட்ட வான்மாக்களையு மாயைகளிலேயொடுக்கி யிந்தமலமாயாதி கன்மங்களுடனே யான்மாக்களையுஞ் சிவசத்தியிடத்திலே யொடுக்கி யிந்தச்சத்தியையுந் தம்மிடத்திலே சாத்துக்கொண்டு சிவமொன்றுமேயாய் நிற்கையில் பின்பு மிந்தக்காலமானதுசென்று சிருஷ்டிகாலமான வந்தரத்திலே தம்முடைய காருணியத்தின் மிகுதியாலே யிருந்த வான்மாக்களைப் பக்குவப்பட்ட கன்மமலத்தைக்கூட்டிப் புசிப்பிக்கவு மாணவமலத்தைப்பக்குவமாக்கும்பொருட்டு மந்தச்சத்தியை மீண்டும் பிரகாசிப்பித்து அந்தச்சத்தியிடத்திலே தாமும்பொருந்தி யந்தச்சத்தியிலே யொடுக்கிட்டிருந்த மலசத்திரான வான்மாக்களையுந் தோற்றுவித்து இவர்களுக்கு முன்பு விட்ட குறைக்கீடான தனுகரணபுவனபோகங்களையுங்கொடுத்துத் தாமும்முதலகெடாமலநின்றும் அவற்றிற்றுமவையவராயவாக்களைக் கன்மமலங்களுக் கீடாகநின்று புசிப்பித்திப்படிச்செய்கிற தம்மையுமிந்த வுபகாரங்களையுந்தெரியாமல்விஷயாதிகளிலேயிரேசிக்கும்படி திரோபவித்து இந்த காலுகிருத்திய

த்திறலுங் கனமுங் கலையொத்து மலபாகமுமுண்டா யினாக ளமுத்திக்கும் பிராரத்தராவா ரெப்போதென்ன றவரதமுந் திருவுள்ளத்தில் லனுக்கிரகமேபண்ணி யிப்படியுள்ள பஞ்சகிருத்தியங்களைத் தமமுடையவருளாலே நடத்திப்போதாநின்ற காலங்களிலே பக்குவப்பட்ட ஆன்மாக்களையறிந்து அவர்க ளளவுக்களவான தீக்ஷைகளாலே யிரக்ஷித்து முறைமையிலே கூட்டிக்கொள்ளுகையால இந்தச்சக்தியையுடையசிவனே சர்வ லோகங்களுக்குந் தாயுந்தந்தையுமென்றறியாயாக பக்குவப்பட்டஆன்மாக்களைத் தமமுடையவருளாலே நடத்திப்போதாநின்ற காலங்களிலே யிரக்ஷிக்குமுறைமை யெப்படியெனில்?—அம்மையப்பரப பரிசேவந்தளிப்பர்=அந்தச்சத்தியையுடைய சிவன பக்குவப்பட்டவான்மாக்களை யறிந்து ஒருமலத்துடனேநின்ற விஞ்ஞானகலரிற் பக்குவாக்கு பிராணனுடனின்ற முறைமையிலே பிரகாசித்தும் இரணடுமலத்துடனேநின்ற பிரளயாகலரிற் பக்குவமுறு திவ்வியமான திருமேனியுடனே தோன்றி யந்தரந்தரிசனந்தானும இரக்ஷித்து மூன்றுமலத்துடனேநின்ற சகலரிற் பக்குவமுறுஅவர்களைப்போன்ற திருமேனியுடனே யெழுந்தருளிவந்து சத்தினிபாதத்துக்கீடாக நாலுவகைப்பட்ட தீக்ஷைகளாலும் "திருநோக்கால் பரிசத்தால் திகழுமாக்கால் பாவனையால் மிக்கநூலால் யோகப்பண்பால், எனகிறபிரமாணப்படியே ஆறுவகைப்பட்ட காருணியத்தினு மிரக்ஷித்து இப்படி இந்தமுறைமைகளிலே யநுக்கிரகியாநிற்பர் இப்படித்திருமேனிகொண்டவராகில் வருமிக்த லோகங்களிலுள்ளாரிலே யொருவ ராகாரோவெனில்?---அம்மையப்பரெல்லா வுலகுக்கு மப்புறத்தார்=அருளாலேதிருமேனிகொண்டு இரக்ஷித்ததொழிந்து அக்கருணையையறியாரறியுமிடத்தும் பிருதிவிமுதல நாதமீறான தத்துவங்களுக்குஅப்பாற்பட்டுநின்றே யறியவேண்டுகையா லறியப்பட்டசத்தியுடையசிவனுமித்தச் சர்வலோகங்களுக்கு மப்பாற்பட்டே யிராநிற்பன சிவனே

பிரபஞ்சத்துக்கும்பப்பாற்பட்டே யிருப்பானாகில் பிரபஞ்சத்தானே நடந்ததோவென்னில்?—இப்புறத்து மல்லார்போனிற்பார்வார்=தம்முடையவருளாலே சகலலோகங்களையு நடத்தும்பொருட்டுத் தம்முடைய சொரூபந் தோன்றாதபடி யாறுவகைப்பட்ட வத்துவாக்களே திருமேனியாகக்கொண்டு தந்தாம்பிரசங்கினையாலே பிரபஞ்சநடவாநிற்கத் தாமவையவராயவைசலின்றியே யொரு பணியற நில்லாநிற்பர்,

இதனாற்சொல்லியது கர்த்தாவையுஞ் சத்தியையும் மூன்று வகைப்பட்ட ஆன்மாக்களையும், மலங்களையும், பஞ்சகிருத்தியத்தையும், மூன்றுவகைப்பட்ட ஆசாரிய மூர்த்தியையும், தீக்ஷாக்கிரமங்களையும், பதமுத்திகளையும் சாயுச்சியத்தையும், சத்தாவே கதேசியுமல்ல பரிபூரணனுமல்ல பூவிற்கந்தம்போலப் பக்குவங்களிலே பிரகாசிப்பனென்னு முறைமையையும், அவன்கிருபாமூர்த்தியென்னு முறைமையையும், சர்வத்தையுங் கூடி நிற்சச்செய்தே தானொன்றோடு தோயவில்லனென்னு முறைமையையு மறிவித்தது (௬)

இப்படிச் சிவரூபத்தைத் தரிசித்துக் கூடுமுறைமையெப்படியென்ற மாணவகனை நோக்கி யருளிச்செய்கிறார்,

தமயிற் றலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தமயிற் றலைப்படுத் குருமுணரிற்-றமயீ
னிலைப்படுவ ரோரிருவர் நீக்கிநிலையாகித்
தலைப்படுவர் தாமத் தலை.

இ-ள், தமயிற்றலைப்பட்டார் பாலேதலைப்பட்டு=தந்தாமிடங்களிற் பக்குவமறிந்து எழுந்தருளிவந்த ஆசாரியனிடத்திலே தாழ்ந்து கூடிவழிபட்டு,—தமயிற்றலைப்படுத்குருமுணரில்=ஆசாரியனனுக்கிரகத்தாலே முன்பு தானாக அபிமானம்பண்ணி யிருந்த

தேகாதிகளைத் தமக்கு வேறென்றறிந்து நீக்கித் தம்மையுந் தரிசி
த்துத் திருமேனிகொண் டெழுந்தருளிவந் தனாதியான தம்பிரா
னார் தம்மிடத்திலே நின்று பிரகாசிக்கிற முறைமையுந் தாமறியப்
பட்டு —தம்மினி லப்படுவரோ ரிருவர்=தம்மிடத்திலே யனாதி
யே தோற்றமுமில்லாமல் நின்று நடத்திப் பாருமாக்கி யந்தப் பக்குவத்
திலே யிப்படித் தரிசிப்பித்த விசுத்தஞானநேயங்களாகிய சத்தி சி
வமான விரண்டு முதலுந் தோன்றுகிறதும்,—நீங்கிநிலையாகத் தலை
ப்படுவார் தாமத்தலை=இப்படித் தரிசிக்கிறேனென்கிறதனுடை
ய சுட்டானபோதத்தைவிட்டு அஞ்ஞானத்திலே பொருந்திநிற்கி
லப்பொழுதே யந்தரேகசொரூபமாகிய சிவமுங்கூடி யந்தச் சி
வமாகியே பிரகாசியாநிற்பார். (௨)

இந்தவவதாரத்தை யடியேனுக்குக் கடாக்ஷித்தருளவேணு மென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்கிறார்.

என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
யென்னறிவி லாரறிக வென்றொருவன்-சொன்னபடி
சொல்லக்கேளென்றொருவன் சொன்னா னெனக்கதனைச்
சொல்லக்கே ளுன்னக்குச் சொல்.

இ-ள், என்னறிவு—சொல்=ஆசாரிய னனுக்கிரகத்தாலே யென்னுடைய பசுஞானம்போனவளவில் நானந்தவவதாரத்திலே நின்றனுபவிக்கிறபடி யெப்படியெனில்? பசுஞானம்போய்ச்சிவ ஞானத்திலே யபேக்ஷையுண்டானவர்க ளறியுங்களென்று ஒரு பரமாசாரிய னருளிச்செய்தபடியே சொல்லக்கேளென் றெனக் கொரு பரமாசாரிய னென்னுடைய பக்குவத்துக்கேட்கப் பாரம் பரியம்போல வோருபாயமாக வருளிச்செய்தான், அந்த வவதார த்தை யந்தமுறைமையிலே நான்சொல்ல மாணவகனே நீபுத்திப ண்ணிக்கேட்பாயாக. (௩)

ப்சுஞானம்போய்ச் சிவஞானத்திலேநின் றநுபவித்தபடி யேகேளென்றாசாரிய னருளிச்செய்கையா லாசாரியனுமானமாக் கனி லொருவனேயென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய கிறார்.

அகளமய மாயநின்ற வம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி - நிகளமா
மாணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வென்னுடைய வத்து.

இ-ள் அகளமயமா நின்ற வம்பலத்தெங்கூத்தன் சகளமயம்போலுலகிற்றங்கி = திருவம்பலத்தே ஞானமயனாய் நிருத்தஞ்செய்தருளுகிற வெம்முடைய சுவாமி தன்னுடைய காருண்ணியத்தின் மிகுதியாலே யென்னுடைய பிறவித்துன்பத் தைப்போக்கும் பொருட்டாக வெனக்கு ஞானக்கண்ணில்லாமை யினாலே யூனக்கண்ணுக்குத்தோன்ற விலங்கு சாதிகளை யபாய மாகப்பார்வையிட்டுப் பார்வை பிடிப்பாரைப்போலச் சாவமூந் தனக்குத் திருமேனியானவையா லென்னைப்போலச் சகளீகரித் தாற்போல் விசுவத்தி லொருதேகிபோலத்தோன்றி - நிகளமா மாணவமூலமலமகல வாண்டனன்காண் மாணவக வென்னுடைய வத்து = மாணவகனே, ஆன்மாவையும் மாயாதேகத்தையுங் கூட்டிய பிணிக்குக்காரணமான விலங்காகியகன்ம மூண்டாம் படி நிற்கிற வாணவமலமாகிய மூலமலம் விட்டுப்போம்படி யநாதியே யென்னைவிட்டு நீங்காமனின்ற மிப்பொழுது பக்கு வப்பட்ட வத்தரத்திலே யிப்படித் திருமேனிகொண்டெழுந் தருளிவந்து என்னுடைய பிறவிநோய்க்கீடாக வுபாயமாகவே அவனே சங்காரங்களிலேலே பேதித்தடிமைகொள்ளும் பொரு ட்டாகவிப்படி யருளிச்செய்தொழிந்து வாக்குமாத்திரகோசர மாயுள்ளசிவ ஞான்மாவாவாரே. (ச)

இப்படிப்பட்டவிவன் திருமேனிகொண்டிரக்ஷிக்கவேண்டுமோ தானே யிரக்ஷிக்கமாட்டானோவென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்கிறா.

ஆசமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே - பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு

இ-ள். ஆகமங்களெங்கே - பேசு = எனக்கநாதியே தொடங்கி விடியாமனின்ற பேரந்தகாரமான வாணவமலம் பக்குவப்பட்டபடியறிந்து பரமேசுரன் தன்னுடையவருளாலே திருமேனிகொண்டெழுந்தருளிவந்து என்னுடைய மலமாயாதிகன்மங்களையும் விடுவித்து என்னையு மென்னுடைய சுதந்தரவீனத்தையு மறிவித்துத் தன்னுடைய வடிவுகொண்டு ரூபசொரூபங்களையு மெனக்கேறக்கத் தெளிவித்துத் தன்னுடைய பரமானந்தபோகத்திலே யென்னைத் திருத்தியடைவித்து அடிமைகொண்டிலனாகில் அவனுடைய எல்லைப்படாத சொரூபத்தையறியவல்லாரியார், அதனை யநாதியே சொல்லப்பட்ட வாகமங்களு மதிலே வகுப்புண்டவாறு சமயங்களு மந்தச்சமயங்களில் முடிந்தபொருளின் யோகங்களு மிவற்றை யறியுந்தக்க விவேகஞானங்களு மென்செய்யவற்று, இதனை விசாரித்துச்சொல்லாய் ()

ஆனால் சாத்திரத்தால் பிரயோசன மொன்றுமில்லையோ வென்ற மாணவகனை நோக்கி யருளிச்செய்கிறார்.

சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே - யார்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

இ-ள். சாததிரததை யோதினாககுச சற்குருவின்றன் வச னமாததிரததே வாயததுளம வநதறுமே = உபதேசமின்றியே சாததிர மாததிரமே யோதினால திருமேனிகொணடெழுநதருளி வநத ஞானாசாரியன கருணையாலே யுபதேசிககததகக சததான வாரததையிலே பெரிய பிரயோசனமுணடாகமாடடாது.அதெ னபோலவெனில, - ஆரததகடறறணணீர குடிததவாககுததா கநதணிநதிடுமோ தெணணீரமையாயிததனைச செபபு = ஆர வாரததையுடைய கடலிலநீர பெரிதெனறிததனை மிகவுஙகுடிந தாலு மொருசறறுந தாகநதணியாது, அநதககடலினீர மேகந தின கைபபடடுவநதபொழுதே குறைநதசலததிலே மிகுநததா கந தணியாநிறகும அதுபோலச சாததிரமுங குருமுகததாலே பெறறாலொழிநது பிரயோசனமாகாது, தெளிநத நீரமையினை யுடையா யிதறகுச சநதேகமுணடாயிறசொல. (௬)

ஆசாரியனுமெமைபபோல வோருடமபிலே நின்றதறகுத் தககக கிருததியஙகளுஞசெயது நிறகசசெயதேயும ஆனமாககளு டைய மலஙகளைபபோககிச சுததஞானததைப் பிரகாசிககவலல சாமரததியததை யுடையனேனெனறு மையுபபடட மாணவ கனைநோககி யிதனை யினனமும விளஙகவருளிசசெயகிறார்.

இன்று பசுவின மலமனறே யிவ்வுலகி
னின்ற மலமனைதது நீககுவதிங் - கென்று
முருவுடையா னன்றே யுருவழியபபாயு
முருவருள வலலா னுனை

இ-ள். இன்று பசுவின் மலமென்றே யிவ்வுலகினின்ற மல மனைதது நீககுவதிஙகு = இநதலோகததி லெல்லாமலங்களையு மிப்பொழுது பசுவின் மலததாலல்லவோ போக்கப்பட்டது,—

எனறுலுரு வுடையானனறே யுருவழியபபாயுமுரு வருள வல்லா னுளை = ஆனால அநாதியே கூடிபபோதுகிற தேகாதிகளா னது பகருவபபடடட வானமாககளுககிலலை யாயவிடடபடி பொ ருநதபபடட சுததரூபமான ஞானததைப பிரகாசிககவலல சாமாததியந திருமேனிகொண டெழுநதருளிவநத வாசாரியனுக கொழிநது வேறொருவாக குணடாகிறசொல. (எ)

இபபடிககொதத ஞானாசாரியன பிரசாதததைபபெறறவா களபெருமை யருளிசசெயகிறா.

கண்டததைக கொணடு கரும முடிததவரே
யணடததி னபபுறதத தெனறே - யணடததி
னைபபுறமு மிபபுறமு மாராயவுஞ செனறறியு
மெபபுறமுங கணடவாக ளினறு.

இ-ள், கணடததைக கொணடு கரும முடிததவரோ = அநாதியே பூரணனாயத தோனறுமலநினற சிவன காருணணி யததினாலே நமமைபபோலே யெழுநதருளிவநத வாசாரிய மூாததி யையு மவனாலே யிதுகாணவலலவா யிருநததெனறுகணட தனனு டைய வுடமையையு மிநதவுடமையை யேறெனறறிவிகக வறிநத தனனையுமாகப பதி - பசு - பாசமெனறு சொலலபபடட விநத மூனறுபொருளையுங கணடு வுடகொண டிதனாலே கனமததை முடிததவாகளே (இதனாற கனமததை முடிததபடி யெனனெ னில கனமமானது சஞசிதமெனறும பிராரததமெனறு மாகா மியமெனறு மூனறுவகைபபட டிருககையாலிதனை யாசாரிய னாலே தீககையிலே யததுவாசோதனை பணணுகையினாலே சஞ சிதமான கனமததையும தேகமுள்ளளவும பிராரததமுணடா கையாலிநத தேகததுடனே கூடபபிராரதத மானகனமததை யும அவனருளிசசெய்த வுபாயததிலே தானினறு மாகாமிய கன்மமேறுமலும் போகவினைததுவஞானிகள) அணடததினப

புறத்திதன்றே = அந்த ஞானசொரூபத்தை யண்டத்துக் குள்ளேயென்றும் புறம்பேயென்றுங் கொள்ளாமல் - அண்டத் தின்புறமுமிப்புறமுமாரறிவரென்றறியும் = அந்த ஞானத்த துவாதீதமாயிருக்கிற முறைமையு மாத்தத்தத்துவங்களுக்குத் தத்துவமாய் நிற்கு முறைமையு மானமாக்களுக்கு காரணமாவா நிற்கு முறைமையுமுணர்ந்து தாமு மிந்தப்பரிபூரணமான ஞானமே யாய்நிற்கவே யவர்களுக்கிந்த ஞானத்தினைக் கியத்தாலே யிப்ப டியாமென்கிற கருத்துமழியாநிற்கும், அப்பொழுதே யவ ர்கள் சிவமாயே நிற்பார்கள்,—எப்புறமுங் கண்டவர்களின்று = அவர்களே இப்பொழு தெல்லாப்பொருள்களையு முணர்ந்து பரிபூரணமாய்நிற்கிற கலியாணர்கள். (அ)

அந்தச் சிவசொரூபந்தா னெப்படியிருக்குமென்ற மாணவ கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

அன்றுமுத லாரேனு மாளா யுடனாகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதிலை-யின்றிதனை
யெவ்வா றிருந்ததென் றெவ்வணஞ் சொல்லுகே
னவ்வா றிருந்தது.

இ-ள் அன்றுமுதலாரேனு மாளாயுடனாகிச் சென்றவர்க் குமின்னதெனச் சென்றதிலை = அநாதியே தொடங்கி யீஸ்வர னுடைய ஏவலினாலே சிருஷ்டி திதிகளுக்குக் கர்த்தாவுமாய்ப் பின்பு சங்காரகாலத்திலே யீஸ்வரனிடத்திலே கூடத்தக்க பிரம விஷ்ணுக்களு மவனுடைய வுண்மையான சுரூபமிப்படியே யிருக்குமென்று மின்னதென்றுந் தெரிந்ததில்லை,—இன்றிதனை யெவ் வாறிருந்ததென் றெவ்வணஞ்சொல்லுகே னவ்வாறிருந்தது = அவர்களாலு மறிதற்கரிய விந்தப்பொருளை யிப்பொழுதேயப்படி யிருக்குமென்று மெந்தரூபத்தையுவமித்துச்சொல்லுவே னந்தப்

பொருளை யாவர் சிலர்கூடி யநுபவித்தவர்களுக் கெப்படியிருந்ததோ வப்படியே யிருக்கும். (௭)

இன்னமு மிதனைவிளங்க வருளிச்செய்கிறார்.

ஒன்றுங் குறியே குறியாத லாலதனைக்
கொன்றுங் குறியொன்றி லாமையினு - லொன்றோ
டுவமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

இ - ள். ஒன்று—சான்று = இந்தப்பொருளுக்காதியே தொடங்கித் தனைப்பிரிந்துனில்லாம லதுவதுவாய் நிறைகிறதே யுடையாளமாதலா லிதுவொழிந்த மற்றப்பொருளுக்கு வேறே ரடையாளமுமில்லையாகையாலே யொருபொருளுடனுவமித்துச் சொல்லுதற் கிதற்கொப்பான தொருபொருளுமில்லை, ஆகலா லிப்பொருளாதியே யிரண்டறநின்ற முறைமைபோல விடைபடாதே யிரண்டறநின்று சிவானுபவத்தையுடைய சிவயோகிகளே யிதற்குச்சாக்ஷி. (௮)

இப்படிப்பட்ட ஞாதாக்களுக்குப் பிராரத்தத்தாலே தேகமுள்ளளவு மிந்திரியாதிகள் சேவியாதோ? இவர்களிடைவிடாமற் சிவனை யநுபவிக்கிறபடி யெப்படியென்ற மாணவகனை நோக்கி யருளிச்செய்கிறார்.

ஆற்று லலைகடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை
மாற்றியவ் வாற்றன் மறித்தாற்போல் - தேற்றிப்
புலன்களைப் போதம் புறம்பொழியு மந்த
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

இ - ள். ஆற்றலலைகடற்கே பாய்ந்தநீரந்நீர்மை மாற்றியவ் வாற்றன்மறித்தாற்போல் = ஆற்றலேசென்ற நிலையையுடைய)

கடலிலே கூடியநன்னீர் கடல்நீருடனே யொன்றாய்த் தன் தன்மைகெட்டு மீண்டுமந்தவாற்றிலே சென்று தூரமெதிர்த்தாலு முன்புபோல நன்னீராகாம லந்தவுப்புநீரே யானாற்போல, — தோற்றிய புலன்களெனப் போதம் புறம்பொழியும் = ஞானத்தாலே சிவனைக்கூடிச் சிவமாயிருக்கிற சிவயோகிகளுக்குப் பிராரத்தத்தாலே யனுபூதிதிரிந்தாலுங் கண்டவர்களுக்கு இந்திரியங்கள் சீவிப்பதுபோலத் தோன்றி யவர்களுக்குச் சுரூபத்திலைக்கியத்தாலே பசுகரணங்கூடாமல் சிவகரணமே பிரகாசியாநிற்கும் — நந்தமலங்களற மாற்றுவிக்கும் வந்து = இவ்வளவேயன்றியுந் தரிசனமாத்திரத்திலே யவர்கள் கருணையானது நம்முடையமலங்கள் நில்லாதபடியும் போக்கி நம்மையுமிரக்ஷியாநிற்கும் (௧௧]

இதற்குப் பிரமாணமுண்டோவெனனில், சிவகரணம் பிரகாசித்த சிவஞானிகளிடத்திலே விளைந்த விசேஷங்களை யொரு செய்யுளிலே பல பிரமாணங்களையு மருளிச்செய்கிறார்.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனை யன்றேவிக் கராங்கொண்ட - பாலனை
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்

இ - ள் பாலை—காண் = சிவனுடைய வருளாலே சிவனைப் பெற்ற நாயன்மார் பாலைநிலம் நெய்தல் நிலமாகப்பாடியதும், பாம்புகடித்து மரித்தவன் பிராணனைப் பெற்றெழுந்திருக்கும்படி பாடியதும், பக்குவத்திலே காலனையேவி முதலைப்பிடித்து மரித்த புதல்வனைக் காலனைப்போக்கி யழைப்பித்ததுவும் மாணவகனே? யவர்களுக்கு நம்மைப்போலப் பசுகரணமாக வெசீவியாமல் சிவகரணமாகவே யிருத்தலால்காண். (௧௨]

இந்தவுத்தம பெற்றவர்களெல்லார்க்கு மிப்படி விசேஷஞ் செய்யுமோவென்ற மாணவகனைநோக்கி யிந்த சத்திநிபாத முடையவர்க்கே யிவையுண்டாமென் றருளிச்செய்கிறார்.

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டகற்றின்
றுங்களே சட்ட வுறங்குவர்க - ளாங்கதுபோ
லைய னருட்கடைக்க ணோக்கத்தற்பி னப்பொருளாய்ப்
பைய விளையுமென் பார்.

இ - ள். தூங்கி—பார் = சுகதுக்கவேதனைகளிலே மிகவு மொரத்துண்டாலொருவனுக் கறிகருவிகள் நீங்கி மயக்கம்வந்தவி த்தகாலத்திலவனளவி லன்புடையவர்கள் நன்றாகப்படுத்த சயனத் திலே யவர்கள் கூடியபின் றனையும் பிரபஞ்சத்தையும்மறக்கத் தக்க பேருறக்க மவர்கள் கூட்டவேண்டுவதன்றியே தன்னிட த்திலே யதுதானே யுண்டாகாநிற்கும். அந்த முறைமைபோ லச, சரிதைகிரியாயோகங்களின் முற்றுதலாலே யிந்த சத்திநி பாதமுண்டாயவர்க ளந்த மூன்றுபாதத்தையு நிகழ்த்திப் பிரபஞ் சத்தையும் விட்டு ஞானத்திலே யபேக்ஷை யுடையாரென்னை யிரக்ஷிக்கைக்கு ஞானசாரியனை யெங்கே பெறுவேனென்று மிக்க தேட்டத்துடனே சென்றடைய அவன்மீது ஆசாரியனு மிருந்தவனைவைத்து ஞானதீக்ஷாக கிரமங்களிலே மலமாயா திகன்மங்களைப்போக்கி யான்மா விறுணமையையுணர்த்தி யிவ னுடைய சுதந்தரவீனத்தையுங்காட்டி ஞானத்தையுந் தரிசிப்பி த்து இதிலே யொருதன்மையாகியபின்னந்தஞானத்தி னேகதியத் தாலே தன்னையும் பிரபஞ்சத்தையு மறப்பிப்பதான வந்தசிவ சொரூபந்தானே பிரகாசித்தொரு நீர்மையாகவே யெல்லாவிசே ஷங்களும் விளையாநிற்கும், நீயுமிப்படி யிந்ததிருவடியிலே நிற பாயாக. (௧௫)

இனியிந்த வசந்தரத்திலே யான் நிலைநிற்கும் படியையின்னும் விளங்க வருளிச்செய்கிறார்,

உள்ள முதலனைத்து மொன்ற வுருக்கவரி
னுள்ள முருக்கவந் தன்னுடனாந் - தெள்ளி
யுணருமவர் தாங்க ளுளராக வென்றும்
புணரவரி தில்லாய பொருள்

இ-ள். உள்ள முதலனைத்து மொன்ற வுருக்கவரி னுள்ளமுருக்கவந் தன்னுடனாம் = மாணவகனே? ஆன்மாவுக்குப் பிரபஞ்சவேதுவாயுள்ள தத்துவங்களு மலங்களுமாயுள்ளவை கடாக்ஷத்தாலே யிவை யொருவழிப்பட வில்லைபாய விடும்படி ஞானம் பிரகாசிக்கி லந்தஞானத்தி னைக்கியத்தாலே யிப்படிப் பெறலே மென்கிற வுன்னுடைய கருத்தானதழியும்படி யப்பொழுதே சிவம் பிரகாசித் துன்னையொரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்கும்; தெள்ளி யுணருமவர் தாங்க ளுளராக வென்றும் புணரவரி தில்லாய பொருள் = இப்படி யொழிந்து சிவனை யாராய்ந்தறிய விசாரிக்குமவர்கள் தங்கள்பாவனை குலையாது நிர்க்கச சித்தே யறிந்துகூட விசாரிக்கிலவர்களுக்கெப்பொழுதும் பொருந்துகைக்கு முன்னில்லாத் தந்தப்பொருள். (கசு)

இந்தப் பதினாலுவெண்பா உபதேசத்தின் முறைமையாகையால், இதற்குப் பிரமாணமாகத் திவ்வியாகமங்களைத் தம்பிரானருளிச்செய்த வடைவே யான்மாக்களுக்கு அநாதியாயவருகிற சனனமரணங்களுஞ் சித்தாக்கங்களும் ஞானத்தா லல்லது போகாதாகையா லிந்தஞான முண்டாகும்பொருட்டுப் பக்குவங்களுக்கீடாக வாசாரியர் கடாக்ஷத்தாலே சரியைகிரியா யோகங்களைச்செய்து, இதின் முற்றுதலாலே ஞானாசாரியனை வழிபட்டு ஞானோபதேசத்தைப் பெற்று, ஞானத்தி னைக்கியத்தாலே சிவனைப்பெற்று முத்தராம்படியும், இந்த ஞானங்கூடாமல் முற்பட்டளவுகளிலே நின்றவர்கள் பதமுத்திப் பெறும்படியும்,

இவற்றைச் சுருங்கச்சொன்ன சரியையுங் கிரியையு மொன்றாக்கிச் சிவதன்மமென்றும், யோகத்தைச் சிவயோகமென்றும், ஞானத்தைச் சிவஞானமென்று நாலுபாதத்தை யொன்றாக்கி யிவற்றிலே சாதிக்கு முபாயங்களையும் பேறுகளையு மருளிச்செய்கிறார்.

> நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா
> னல்லசிவ ஞானத்தா னானழிய - வல்லதனு
> லாரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்கா
> ணாரேனுங் காணா வரன்.

இ-ள். நல்ல—வரன் = சிவனைக் காத்தாராகக் கொள்ளாத சமயங்களுடனே நின்று சாதித்துக்கெடாத குற்றமற்ற சிவனை நோக்கின சைவசித்தாந்தத்திற் சிவதன்மத்தாலேயாதல், சிவயோகத்தாலேயாதல், சிவஞானத்தாலேயாதல், சிவனைக் கூடும்படி சாதிக்குமவர்கள் தங்களாலே செய்யப்பட்டதாகக் கருதாதே கர்த்தாவி னேவலென்றே யறிந்து தம்முடைய சுதந்தரத்தைவிட் டவனைப்பட்டு வரவல்லாரியாவர் சிலரவர்களந்தக் கர்த்தாவினமேலே மிக்கவன்பைவைக்கி லவ்வவரிடங்களிலே சென்று தலைப்படாநிற்பன் மாணவகனே? பிரம விஷ்ணுக்களின்றளவுங் காணப்படாத சிவன். (௰௫)

இந்தவெண்பா மூன்றுவகைக்குங்காட்டும் இந்த மூன்று வகையிலு முட்பட்ட சிவதன்மத்தையறிந்து வழிபடுவார் வழிபடும்படியென்ற மாணவகனைநோக்கிச் சிவதன்மத்தை மெல்வினையென்றும் வல்வினையென்று மிரண்டாக்கி யிந்தமுறைமையிலே யருளிச்செய்கிறார்.

> மெல்வினையே யென்ன வியனுலகி லாற்றரிய
> வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் - சொல்லிற்
> சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வாய
> பவகன்ம நீங்கும் படி.

இ-ள், மெல்வினை—நீங்கும்படி = மெல்வினையென்றுமு லகத்தாரால் செய்தற்கரிய வல்வினையென்றுஞ் சிவனை வழிபடத்தக்க விந்த விரண்டுவகையுஞ் சொல்லு மிடத்துச் சிவதன்ம மென்றே சொல்லப்படுமாதலால் இவை யிரண்டினு முன்னுடைய கருத்துக்குப் பொருந்தினதொன்றை வேறொரு பலன்களையுங் கருதாதே செய்வாயாக, மாணவகனே! யுன்னுடையபிறப்பாகியவினை விட்டு நீங்கும்படி இதன்றிச்சொல்லிய பலன்களைக் கருதிப் பதங்களையடையாமல் சாயுச்சியமே பெறுகைப் பொருட்டாக வுண்மையான சிவஞானத்தைப் பெறவேணு மென்று கருத்து. (௰௪)

இந்த விரண்டுவகையில் முற்பட்ட மேல்வினையின் முறைமை யருளிச்செய்கிறார்.

ஆதியை யர்ச்சித்தற் கங்கமா ங்கங்கே
நீதி றிறம்பலவுஞ் செய்வனவும் வேதியனே
நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநாம் வேறு

இ-ள். ஆதியை—வேறு = வேதியனே யாகமங்களி லருளிச்செய்தபடியே சிவனை யுள்ளபடி யர்ச்சித்து வழிபடத்தக்க கிரியாவிதிக்குப் பக்குவமாம்படி இவனுடைய வவயவங்களினாலே யந்தந்த வவதாரங்களிலே செய்யத்தக்க திருவலகு, திருமெழுக்கு, திருவிளக்கு, திருநந்தனவனம், திருப்பள்ளித்தாமம், திருமஞ்சனம், திருமாலை, கூத்து, பாட்டு, முதலாயுள்ள தொழில்களும், திருவேடத்தாரை வழிபடுகையும், சிவபத்தருக்கு வேண்டுவன செய்கையும், திருமந்திரம் சமிக்கையுமாக விப்படியே செய்யப்பட்ட குற்றமற்ற வழிபாடான சரிதையும், இந்தச்சரிதையின் முதிர்ச்சியாலே திருவுள்ளத்தடைத்துச் சிவனையர்ச்சித்து வழிபடுகிற கிரியாவிதியும், நல்ல செயற்பாடென்று நமக்கெளி தாகச

செய்யலாகையாலே யிவை யிரண்டையு மெல்வினையென்று திவ்வியாகமங்களிலே சொல்லப்பட்ட படியாலே நாமு மிதனை யுனக்குச்சொன்னோம், வேதியனே யென்றது இந்தச் சரிதைக்கிரியையிலேநின்று வழிபடுகிற வளவில் கொலை, களவு, கள், காமம், பொய்யென்கிற வைந்தையும் விட்டு நிற்கையாலும், வாக்கு மனங் காயங்களால் நினைப்பன சொல்வன, செய்வன, வெல்லாந் தெய்வ கிருத்தியத்திலே யாகையாலும், சுத்தத்திலே நின்றும் நீங்கிச்சுத்தனுப நிற்கையாலும் சாவான மாக்களையுந் தன்னைப் போலேகாணகையாலும், வேதாகமங்களின் முறைமைகளிலே வழுவாமல் நிற்கையாலும் இவனை வேதியனே யென்று ஆசாரியனாலே யழைக்கப்பட்டது.

இந்தச் சரிதையுங் கிரியையும் மெல்வினையாகி இந்தநிலைகளின் முதிர்ச்சியாலே பின்புண்டான சாந்ததிலே சிவனளவிலே மிகுந்த சிநேகமா யிவனுக்கு விளைந்த வல்வினை யிருக்குமபடியே யருளிச்செய்கிறார்.

வாங்கள் தருஞ்செய்ய வயிரவாக்குத் தங்கள்
காயங்களினு லன்றுகறி யாக்க - விரங்காதே
கொலவினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று.

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலாற் றான்.

செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
யைய விதுவமுது செய்கென்று - பையவிருக்
தூட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவனை
காட்டியுரை செய்வதென்னோ நாம்.

ஆகவிந்த மூன்று திருவெண்பாவிலுள்ள முறைமைகள் சாத்திரங்களிற் சொன்னவழியன்றியே யுளவாகிறவன்பின் பெருமையாலே புலகத்திலியற்கைவிட்டு யாவராலுஞ் செய்யவொண்ணாத செயல்களைச் செய்ததாகையா லிதனை யொருபிரமாணங்களாற் சொல்லவரிதாகையாலே வல்வினையென்று சொல்லப்பட்டது. (உ௰)

இப்படிக் கொடிதான வல்வினைகளைச் செய்யுமவர்களு முத்தியைப்பெறுவார்களோவென் றையப்பட்ட மாணவகனை நோக்கியருளிச்செய்கிறார்,

செய்யுஞ் செயலே செயலாகச் சென்றுதலைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டா - ரையா
வுழவுந் தனிசு மொருமுகமே யானால்
விழவுண்டோ சொல்லா யிது.

இ-ள் செய்யுஞ்செயலே செயலாகச்சென்று தலைப் பையக்கொடுத்தார் பரங்கெட்டார் = இப்படித்தான கொடிதான வல்வினைகளைச் செய்யச்செய்தே யிந்தக் கொடியசெய்திகளா லகிதமவாராமற் சிவனை நோக்கியேயின்று சிவனளவில் வைத்தவன்பின் பெருமையாலே யிந்தச்செயல்களையு முறைமையான செயலென்றேகொண்டு தம்மையு முள்ளச் சிவன் கையிலே கொடுத்துப் பரங்கெட்டு விடுகையாலே யவர்கள் கர்த்தாவின் கைப்பட்டு முத்தியைப்பெறுகிறார்கள்,—ஐயா வுழவுந்தனிசுமொரு முகமேயானால் விழவுண்டோ சொல்லாயிது = ஐயனே ? யொருவனுக்குழவோரிடத்திலுந் தனிசோரிடத்திலு மானாலொன்றாகக்கொள்ள றுதவிகூடாது, அவை யிரண்டுமோரிடத்திலேயானா லிவன் சுத்தஞ்சயவிடுகை சந்தேகமில்லை, அது போலச் செய்கிறசெயல்களி லகிதம வாராமற் சிவனை நோக்கியே செய்தும இந்தச் செயல்களுஞ் சிவன் செயலென்றேகொண்

டு தமமையு மவன்கையிலேகொடுதது பரவகெட்டு விடுகை யாலே யிவன பெறுகிறமுததிககு மிழவுண்டாருமோ விதனை விசாரிததுசசொல்லாய (௨௧)

இனிச சரிதைகிரியைகளிலேநின்று சாதிததவர்க்கும பிறபட்ட சநததி விபபடிமுதிராத வலவினைகூடாமலயோகததுக கதிகாரியானவனுககு யோகம வெருவிதமாகையினாலே விதனைச சுருககககொணடு ஆதாரயோகமெனறும நிராதாரயோகமெனறும உததமமானயோகஙகளை யெடுததருளிசசெயகிறார.

ஆதார யோக நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே - யாதாரத்
தாககும பொருளாலே யாககும பொருளாமொன
றாககாப் பொருளேயொன றும.

இ - ள். ஆதாரயோக நிராதாரயோகமென மீதானந தெய்தும் விதியிரண்டே = ஆதாரயோகமெனறு நிராதாரயோகமென்று மெலலாவற்றிற்கு மேலானவிடமாகிய திருவடியிலே பககுவப்பட்ட ஆன்மாககள பொருநதுமபடி சாதிததுககூட்டுகைககு வேதாகமங்களிலே விதிககப்பட்ட இரணடு பிரகாரமாயிருக்கும்.— ஆதாரததாககும பொருளாலேயாக்கும் பொருளாமொன்று = ஆதாரஙகளிலே யொவவொரு திவவியரூபஙகளை யாசாரியனிடததிலேபெற்று அந்தத்தானஙகளிலே தியானிததிருக்கத்தக்க வாதாரயோகமொன்று — ஆக்காப்பொருளே யொன்றும் = இந்த வாதாரயோகங் கைவந்தவாறே யாதாரங்களில் பார்த்திருக்குமபடி கற்பித்துககொண்டு நிற்கிற சைதன்னிய சொருபத்தைப்பாராதே பார்த்துநிற்கிறது நிராதாரயோகம். ()

இந்தத் திருவெண்பா வாதாரயோகத்துக்கு நிராதாரயோகத்துக்குங் காட்டாகையி லிதில் முன்னே சொல்லப்பட்ட வாதாரயோகத்தை மேல்விளங்க வருளிச்செய்கிறார்.

ஆக்கி யொருபொருளை யாதாரத் தப்பொருளை
நோக்கி யணுவி லணுநெகிழப் - பாக்கி
லிவனாகை தானொழிந் திட்டேகமா மேகத்
தவனாகை யாதார மாம்.

இ - ள். ஆக்கியொருபொருளை யாதாரத்து = தேகத்திலே கற்பிக்கப்பட்ட வாறாதாரங்களிலே யாசாரியனருளிச்செய்ததொருதிவ்வியரூபத்தை யித்தற்குப்பொருந்தின வோராதாரத்திலே தன்னுடையமனமானது விஷயங்களிற் பற்றும் விதிலே பற்றும்படி கற்பித்துக்கொண்டு,—அப்பொருளைநோக்கி = அப்படி கற்பித்துக்கொண்ட ரூபங் கைவரும்படி நெடுநேரந் தியானித்து,—அணுவிலணு நெகிழப்பாக்கி லிவனாகை தானொழிந்திட்டேகமாம் = அந்தத்தியானங் கைவந்தவாறே யந்தவாதாரங்களைவிட்டுத் தன்னிலே யந்தப்பொருளைத் தியானிக்கி லந்தத் தியானத்தின் முறுகுதலாலே தியானிக்கிறேனென்கிற நினைவு கெட்டு அந்தப்பொருளொன்றுமேயாம்,—ஏகத்தவனாகையாதாரமாம் = இப்படித் தியானிப்பானுந் தியானிக்கப்படும் பொருளுமன்றியே தன்னைமறந் தந்தத் திவ்வியரூபந் தானாகிநிற்றது தானேயாதாரயோகம். (உக)

இனி யிந்த வாதாரயோகந் தன்னைச் சூக்குமமாகத் தன்னி தாகச்சாதிக்குமுறைமை யருளிச்செய்கிறார்.

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெய்து
கொண்டவனு மப்பரிசே கூறுபடக் - கொண்ட
விருபொருளு மன்றியே யின்னதிது வென்னு
மொருபொருளே யாயிருக்கு முறை.

இ - ள்: கொண்டதொருபொருளைக் கோடிபடக் கூறுசெய்யிற கொண்டவனு மபபரிசேகூறுபடுமே = யாதொன்று தானகை வரததியானிததபொருளை நுணணிதாக நுணிககிய பரமாணுவி லும நுணணியதாகத தியானிககி னிபபடிததியானிககிறவனுந தியானிததபொருளபோலப் பரமாணுவினு நுணணியதாக நிறப ன்.—கொணடவிருபொருளுமனறியே யினனதிதவெனறவொ ருபொருளையாயிருக்குமுறறு = இபபடி நிறகவே தியானிபபா னுந தியானிககப்படு பொருளுமனறியே யொருகறபனையற வப்பொழுதேயநத வொபபிலலாதபொருள தானேயா யிருக குமம. (உச)

இனி யிந்த நுணணியதான தியானமுங்கனாய வாதார யோகததாககு முடிநதயோகமுமா யுபாயயோகமுமா யிருககிற மந்திரயோகததை யருளிசசெயகிறா

அஞ்செழுத்து மேயம்மை யபபாதனமைக காட்டுதலா
லஞ்செழுதந்தை யாருககப பெறறறிந - தஞ்செழுததை
யோதபபுக் குள்ள மதியுங் செடி லுமைகோன
கேதமற வநதளிககுங கேள

இ - ள் அஞ்செழுத்துமே யமமையப்பா தமைக்காட்டுத லால் = அகார-உகார-மகார-விநது-நாதமெனகிற பஞசாககர மான பிரணவததுககுப பிரமா - விஷ்ணு - உருத்திர - மகேசுர - சதாசிவா இவாகளை யருமதி தேவதைகளுமாய மநதிரமூரத் திமாய் - ஓங்காரமாயே நினறு நடததுகையா லிநதவஞ் செழுததே சததியையுடைய சிவன திருமேனிகொணடு நடததுகிற முறைமை காட்டுதலால்,—அஞசெழுததை யாருககபபெற றறிநது = இநதவஞ்செழுதது மூலாதாரததிலே அகாரமும பிரமாவும - நாபிககமலததிலே உகாரமும் விஷ்ணுவும-இருதய கமலததிலே மகாரமும் உருததிரனும - கணடத்திலே விநது

வும் மஹேஸ்வரனும - புருவமத்தியிலே நாதமும் சதாசிவமும் இப்படிச் சுழிமுனை வழியாகநிற்கிற முறைமையைக் குருவுபதேசத்தாலேபெற்று இந்தவைந்தெழுத்தையு மூலாதாரத்திலே பிரமரந்தரத்திலே செலவுச்சரித்தா லிந்தப் பிரணவ சொரூபமுங்கலந்து விக்கிரகங்களு மொருமையா யுனக்கு நாதரூபமாய நாதாந்தத்திலே யருளைப்பெறுவையென்று ஆசாரியனருளிச்செய்யவறிந்து,— அஞ்செழுத்தை யோதப்புகுள்ள மதியுங்கெடில = இந்த ஓங்காரமான வைந்தெழுத்து முச்சாரணபேதத்திலே நாற்பத்தொன்பதா மெழுத்தும் பதினொலாமெழுத்துமாறுமெழுத்து மிவை கூடினவிடத்திலே விந்துநாதமுமாகவிந்த முறைமையிலே யைந்தெழுத்தாமென்றும வேதாகமங்களிலே விதிக்கையா லிந்தவைந்தெழுத்தையு முணர்த்துவமாக வுச்சரிப்புக்கு விந்துநாதமுடிந்தவிடத்திலே இருசிருஞமான ஆன்ம போதமுங்கெடில,— உமைகோன கேதமறவந்தளிக்குங்கேள = அப்பொழுதே சத்திக்குக் கர்த்தாவாகிய சிவன குற்றமறத்தோன்றியுண்மையானசொரூபத்திலேகூடி யிரக்ஷியாநிற்பன. இந்தவாதாரயோகத்தைத் தூலருக்குமமாக மூன்றுபடியாகக் கரைத்த விதபின்பு நிராதாரயோகத்துக்குப் பிராபதனுமபடி பெனவறிக ( )

இந்த வாதாரயோகம் கைவரச் சாதித்தவர்களுக்குமேல் நிராதாரயோக மிருக்கும்படி யருளிச்செய்கிறார்.

ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலுந்
தாக்கிய தா னொன்றோடுந் தாக்காதே - நீக்கியுட
னிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்

இ - ள். ஆக்கப்படாதபொருளாய் = ஆன்மபோதத்தாற் கற்பிக்கக்கூடாத வாத்தமாய,— அனைத்தினிலுந் தாக்கித் தானொன்றோடுந்தாக்காதே = எல்லாப்பொருள்களிலுந் தானகூடி

நிற்கச்செய்தே யவையொன்றோடுந்தான் தோயாமல்,— நீக்கி யுடனிற்கும் பொருளுடனே = ஆன்மாவுக்கு முத்திக்கு விரோதமாய நீக்கத்தக்கபொருள்களையுந் தானேயறிந்து நீக்கியொழியே யிப்படி நீக்கப்படாத வந்தஞானசொரூபத்துடனே,— நிற்கும் பொருளுடனுயநிற்கை நிராதாரமாம் = தன்னுடையபோதத்தை யொழிந்து இதனைக்கூடித்தானு மந்தஞானசொரூபமா யொரு பற்றற்றிற்கி லது நிராதாரயோகமாம் (௨௬)

இந்த ஞானத்திலே யிப்படி இரண்டறநிற்கில சிவனை யுள்ளபடியே காணலாமென் றருளிச்செய்கிறார்.

**காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே**
**காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக்-காண்கின்றார்**
**காண்பானுங் காண்படும்பொருளு மன்றியே**
**காண்கையின்றிக் கண்டனரே காண.**

இ - ள். காண்கின்ற தோர்பொருளைக்காண்கின்றயோகிகளேகாண்கின்றார் காட்சியறக் கண்ணுதலை = எல்லாப்பொருளையு மறிவித்துநிற்கிற ஞானத்தை யதுவேயாகக்காண்கின்ற சிவயோகிகளே சிவனை யிரண்டறக்காண்கின்ற கவியாணர்கள்,— காண்கின்றார் காண்பானுங் காண்படும் பொருளுமன்றியே காண்கையின்றிக் கண்டனரேகாண = மாணவகனே, இப்படிக் காண்கின்றவர்கள் தன்னாலே காணப்படாதாகவும் காணப்பட்டபொருள் தனக்கு வேறாகவுங்காணுமல்லாத ஞானமாகவே நின்று காண்கையாலே யந்தஞான சொரூபமாகவுடைய சிவனை யப்பொழுதே பெற்று வேறற்றிருப்பார்கள். (௨௭)

இனி யிந்த நிராதாரயோகம் நிலைபெறும்படி யிதற்குபாயமான மௌனயோகத்தை யருளிச்செய்கிறார்.

**பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனைப்**
**பேசாமை செய்யும் பெரும்பெருமான் - பேசாதே**
**யென்றென்றும் மன்னி யிருக்கின்ற யோகிகள்பா**
**லன்றிநின்றும் போகா னவன்.**

இ - ள், பேசாமைபெற்றதனிற் பேசாமைகண்டனரைப் பேசாமைசெய்யும்பெரும்பெருமான் = வாக்கு மனக்காயங்கள் மூன்றினுமட்டுப்படாதது வாக்காலைகையாலும் மாற்றமுண்டேல் வஞ்சமுண்டென்கையாலும் பேசாமையாகிற பரமோபாயத்தை யாசாரியன் பக்கலிலேபெற்று அத்தப்பேசாமை தன்னுடைய தன்னைவிற்போகாமல் வாக்கு மனங் கிட்டப்படாத சிவனைத் தங்களிடத்திலே ஞானதிருஷ்டியாலேகண்டு கூடிச்செயலற்றிருக்கிற சிவயோகிகளைப் பின்பொரு சரீரங்கூடி வாக்குண்டாகாதபடி சங்கத்தை வேரறுத்து விடாநிற்பன் சிவன்,—பேசாதே யென்றென்றும் வண்ணமிருக்கின்ற யோகிகள்பாலுண்ணின்றும் போகானுள்ளன் = இப்படி யுறைவிறந்து சிவனுடனே யிரண்டற்றிருக்கிற சிவயோகிகளிடத்துப் பரமேஸ்வரனெவ்விடத்தினும் வியாத்தமாயினு மவ்விடங்களிலே மறைந்தேநின்று இவர்களிடத்தே பிரகாசித்து இவர்கட்கேயுடனாயிருப்பன் — பேசாமையாகிற பரமோபாயத்தை யாசாரியன் பக்கலிலே பெற்றபடி யென்னெனில் தேகமுதலாயுள்ளவை யுனக்கு வேறென்று மிவற்றுடன் கூடினால் பிறப்புக்குக் காரணமான கன்மமுண்டாமென்று முனக்கு ஞானமே வடிவென்றும் நீக்கையிலே நாமிசைவிக்க நீயுமிசைந்தாயென்றும் அல்லதூஉம் சரீரம் அர்த்தம் பிராணனிவை தத்தம் பண்ணிற்றேயென்றும் நமக்குத் தத்தம் பண்ணினபொருளை நீ விரும்பக்கடவையல்லையேயென்று மாசாரியனருளிச்செய்ய விவனும் நமக்கில்லாதபொருள்களை விரும்பக்கடவோமல்லவென்று அறுதியிட்டான். (உ௮)

நிராதாரயோகத்துக்குத் தூலருக்கும் பரமாசமூன்று திருவெண்பா வருளிச்செய்து மேலிந்த பரமாகிய சிவனை யான்மபோதமிறந்தாலொழிந்து கூடவொண்ணாதென்னு மூன்றமையைப் பல செய்யுட்களாலும் விளங்க வருளிச்செய்கிறார்.

ஒட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற விடஞ்சிவமாம் - நாட்டுற்று
நாடும் பொருளனைத்து நான்கு விதமாகத்
தேடு மிடமன்று சிவம்.

இ-ள். ஒட்டற்றுநின்ற வுணர்வுபதிமுட்டித் தேட்டற்று நின்றவிடஞ் சிவமாம் = ஒருவகையின்றியே நின்ற பரம ஞானத்தை யதுக்கணத்துக்குக் கண்டுகூடின ஆன்மா வந்தஞான மேயாய்த் தானுமசைவின்றியேநிற்கி லந்தஞானத்தில் நிலை யாலே தன்னுடைய வான்மபோதமொழிந்து அந்த ஞானமாயே நின்ற விடந்தன்னிலே சிவமே பிரகாசித்துத் தன்னையு மொரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்கும் — நாட்டுற்றுநாடும் பொரு ளனைத்து நான்குவிதமாகத் தேடுமிடமன்று சிவம் = இப்படி யொழிந்து சுட்டியறியத்தக்க வான்மபோதத்தாலே வெகுவித மாக வாராய்ந்தறியத்தக்கவிடம் பிரபஞ்ச வியாபாரமாகையா லவ்விடஞ் சிவரூபமாகாது. (௨௯)

இன்னமு மிதனை விளங்கவரியு முபாயமருளிச்செய்கிறார்.

பற்றினுட் பற்றைத் தொடைப்படுத்தொரு பற்றிநூல்
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனைப்
பற்றுவிடி லந்நிலையே தானே பரமாகு
மற்றுமிது சொன்னேனோ மதி

இ-ள். பற்றி—மதி = ஆன்மாவுக்குக் கன்மபலத்தை விளை விக்கிறதேகங்களாகிய தனுகரண புவனபோகங்களினுள்ளே பற்றிக்கொண்டு நிற்கிற விச்சாஞானக்கிரியைகளை யொழிப் பதான சிவபோதத்தை விளைக்கத்தக்க சிவஞானத்தை யதுக்க ணத்துக்கண்டதனைக் கூடினேனென்று பிரியப்பட்டிருந்தறிகிற கருத்தனுடையுங் கைவிடி லந்நிலைதன்னிலே யந்த ஞானத்துக்கு மேலான சிவந்தானே பிரகாசியாநிற்கும் அறுதியாகச் சொன்னேனிதனைப் புத்திபண்ணிக்கொள்வாய். (௩௰)

இன்னமு மிந்நிலைக்குக் குற்றம்வாராதபடி வேறுமொ ருபாய மருளிச்செய்கிறார்.

உணராதே யாதும் உறங்காதே யுன்னிப்
புணராதே நீபொதுவே நிற்கி - லுணர்வரிய
காலங்கள் செல்லாத காலத் துடனிருந்து
காலங்கள் மூன்றினையுங் கண்டு

இ-ள் உணராதேயாதும் உறங்காதே யுன்னிப்புண ராதே நீ பொதுவே நிற்கில் = நீ பொருளல்லவென்றறிந்து நீங்கின தேகாதிபிரபஞ்சங்களிலே வாதனைமிகுதியினாலே கூடிநின்று விகற்பியாதே யிந்த விகற்பங்கள் நீங்கின வவத்தைகளிலுண்டான மயக்கங்களி லழுந்தாதே சுகசொரூபத்தை யுன்போதத்தாலறிந்து கூடவிசாரியாதே யிந்தக்குற்றங்கள் நீங்கும்படி யுனக்குக் கண்ணா யுனக்கு நடுவே நிற்கிற ஞானத் திற்கூடி அந்த ஞானந்தானாகவே நிற்கில்,—உணர்வரிய காலங் கள்செல்லாத காலத்துடனிருந்து காலங்கள் மூன்றினையுங் கண்டு = யாவராலும் அறிதற்கரிய செல்காலம் வருகாலம் நிகழ்காலமென்று சொல்லப்பட்ட மூன்றுகாலங்களினும்படாம லிந்தக்காலங்களாலே விசுவத்தை நடத்திக் காலசொரூபமா யிருக்கிற சிவத்துடனே நீயு மந்த காலங்கள் மூன்றையும் வேறாகக்கண்டுகூடி யந்தசிவமேயா யழிவின்றியேயிருப்பை

இந்த வர்த்தத்தினுண்மையு மிந்தவர்த்தத்தைப் பெறத்தக்க வர்களுண்மையும் விளங்க வருளிச்செய்கிறார்.

அறிவறிவாய் நிற்கி லறிவுபல வாமென்
றறிவி னறிவழித்துக் கொண்டவ - ரறிவினராய்
வாழ்ந்திருப்பா ரீத்தவர்கண் மானுடரின் மாணவர்க
டாழ்ந்தமணி காவேபோற் றான்.

இ-ள் அறி—தான = மாணவகனே ? ஆன்மா தன்னுடையபோதத்தையே பொருளாகக்கொண்டு நிற்கில விகற்பிக்கிறதே சுபாவமாய போதமும பலவாயச்சிந்தித்து விடுமென்றும இதனை யாசாரிய னநுக்கிரகத்தாலேயறிந்து தனக்காதியே பிராணனுபகிறகிற ஞானத்தைக்கூட்டித் தன்னுடைய ஆன்மசுபாவத்தையுமொழிந்து அந்தஞானமேயா யந்தஞானத்தி னைக்கியத்தாலே தனக்கின்றளவுங் கிடையாத பெருவாழ்வாகிய பரமானந்தசொரூபமாகிய சிவனைபபெற்றுத தானு மந்தப பரமானந்தமேயா யிராநிறபன். இந்த வாழ்வைப பெறவுரியாரியாரென்னில ? மானுடபபிறபபி லுள்ளாரில தேகாதிப பிரபஞ்சங்களிலுள்ள ஆரவாரங்களைக் கைவிட்டு நிலைத்திலேவைத்த மணியினது நாவேபோலச் சலிப்பறறிருக்கிற சேமானவன், (௩௨)

இந்த நிராதாரயோகத்திலே நிகழ்வதொரு குறியுண்டென்று மிது நிகழ்ந்தாறசெய்யு முபாயமு மருளிச்செய்கிறார்.

ஓசையெலா மற்று வொலிக்குந் திருச்சிலம்பி
னோசை வழியேசென் றொத்தொடுங்கி - யோசையினி
லந்தத்தா னந்தா னரிவையுட னம்பலத்தே
வந்தொத்தா னத்தான மகிழ்ந்து.

இ-ள் ஓசை—மகிழ்ந்து = இந்த நிராதாரயோகத்தைச் செய்கிற சிவயோகிகள் சிவனைப பெறுகைபபொருட்டாகத தேகேந்திரியாதி யந்தக்கரணங்களாயுள்ள ஆரவாரங்களொடுங்கும்படி ஞானத்தினாலே தன்னுடைய விச்சாஞானக்கிரியைகளை யொழிந்தவவதரத்திலே யானந்தத்திருத்தம பண்ணியருளாநின்ற தமபிரானுடைய ஸ்ரீ பாதத்தில் பாலிக்குமென்கிற திருச்சிலம்பிற நாதாந்தமென்கிற வோசைதோன்றாநிற்கும, அந்த வோசை வழியே நாடிச்சென்று கூடி யந்தவோசை முடிந்தவிடத்தே தன்னுடையபோதமு மொக்கமுடியில்தானே யப்பொழுதே

யந்தவோசை முடிந்தவிடமே யிடமாகவுடைய தம்பிரானார் காருண்ணியசத்தியுடனே யமபலமாகிய ஞானப்பிரகாசத்திலே வந்திவனைப் பிரியத்துடனே கூடுவான். (௧௩)

இனித்தாமருளிச்செய்த நிராதாரயோகத்தினுண்மையைத் தமமையொழியப் பிறருமவிளங்க வருளிச்செய்தபடி விளங்க வருளிச்செய்கிறார்.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றதனாற்
சார்புணர்த லன்றே தியானமுமாகும் - சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று

இ - ள். சார்பு—பற்று = தெய்வப்புலமைத் திருவள்ளுவ தேவரும் " சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின ", என்றதை யால் தனக்காதியே தாரகமாயிருக்கிற திருவடிஞானத்தை யதுகண்ணாகவறிந்து அதனுடனே யிரண்டறக்கூடியிருக்கில் மீண்டுமொரு சந்முண்டாகைக்குக் கனமுமுண்டாகாதென் றருளிச்செய்த பிரமாணப்படியே தனக்குத் தரிசனமான ஞானத்தைக்கூடி யசைவறநிற்கி லதுவே சிவத்தியானமாம். அந்த நிலையில தியானிக்கிறோமென்கிற பாவனைகுலையி லப்பொழுதே சுகசொரூபமான சிவனைக்கூடி னொன சமாதி யாநாகாநிறபன. இப்படிக்கூடின சிவயோகிகளுக்குப் பின்பு சநநத்தையுண்டாக்கிற வாகாமிய கனமுமுண்டாகாது. (௧௪)

ஞானத்திலே சிவனைக் கூடவேணுமென்று சிரத்தை பண்ணுவாரை யந்தச்சிவமானது மவதிகூடாமல்வந்து கூடு முறைமை யருளிச்செய்கிறார்.

அனறிவரு மைம்புலனு நீயு மசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ் - சென்று
கருதுவதன முன்னங் கருத்தழியப் பாயு
மொருமகனே கேள்வ னுனக்கு.

இ-ள். அன்றி—உனக்கு = அநாதியே யுன்னை மாறுபட்டு வருகிற விஷயங்களுள் கூடிநின்று சலியாதே யவற்றை வேறாகத்தகண்டு நீங்கின வுனக்குப் பிராணனாயிருக்கிற ஞானமான தன்னுடனே யிரண்டறநிற்கு முறைமைபோல நீயு மதனைத் தரிசித்து அந்தஞானமாகவே இரண்டறநிற்கில, அப்பொழுதே யிந்தஞானத்துக்கு முதலாகிய ஞேயசொரூபமாகிய சிவந்தோன்றுகிறதும இப்படித் தரிசனமான சிவனைக் கூடவென்று சிரத்தை பண்ணுமாயிலதற்கு முன்னே நம்முடைய கருத்தையு மழித்துத் தன்னுடனே யொரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்பன், ஒப்பில்லாதசத்திக்கு நாயகனான சிவன்.

ஆனா லான்மாவாலே சிவனை நினைத்துக் கூடலாமோ வென்னில்? சிவனை யான்மாவாலறியப்பட்ட பொருளல்ல வென றருளிச்செய்கிறார்.

உண்டெனி லுண்டாகு மில்லாமை யில்லையெனி
லுண்டாகு மாண்மை யிரண்டா - முண்டில்லை
யென்னு மிவைதவிர்ந்த வின்பத்தை யெய்துமவகை
யுன்னிலவ னுன்னுடனே யாம்

இ-ள உண்டெனிலுண்டாகு மில்லாமையில்லையெனி லுண்டாகும = உண்டென்னி லுண்டாவதில்லை யென்றுமாம இல்லையெனி லுண்டாவதில்லையென்றுமாம. எங்ஙனேயென்னில்? சிவனை யான்மபோதத்தாலறிந்து கூடலாமென்னில ஆன்மபோதத்தாலறிந்து கூடத்தக்கபொருளாவது இந்திரஞாலம்போன்ற பிரபஞ்சமாகையாலும் சிவன வாக்குமனாதீதனாகையாலு மிப்படிச்சொல்லு மவனிடத்திலுண்டாம பொருளாவதி சிவனைத் தெரியாததொன்றுமே. சிவனான்மாவா லறியப்படாத பொருளென்னில்? அவனிடத்திலு முண்டானது சிவனைத் தெரியாததொன்றுமே,—ஆண்மையிலோரிரண்டாம =

ஆனபடியினாலே யிப்படிச் சிவனைத் தெரியாதிருப்ப தொரு முறைமை யிரண்டுபிரகாரமாயிருக்கும்,—உண்டில்லையென் று மிவைதவிர்ந்த வின்பத்தையெய்தும் வகையுணர்வி லவனுண் ணுடனேயாம் = இந்த பாவ அபாவமென்கிற விரண்டுவழியா லுஞ் சிவனைக் கூடவொண்ணாதென் றறிந்து இவற்றை விட் டுத் தானாகவேநிற்கிற ஞானமாயேநின்று அளவிலாத பேரின் பத்தைப் பெறும்படி. சிவனிடத்திலே யனைப்பையகி லப் பொழுதேதொன்றாலும் பாவிக்கப்படாத சிவன் தன்னுடைய காருண்ணியத்தினாலே யுன்னை யிரண்டறக்கூட்டிற்பன. நிரா தாரயோகமுற்றும் (௩௬)

இந்த நிராதாரயோகத்திலே மிகவும் வாதனையுண்டவர் களுக்கு ஒருபக்குவங்களிலேல் கூடாமைகூடினு லெனசெய்வோ மென்ற மாணாக்கனை நோக்கிச் சிவஞானமாகிய தத்துவஞான மிருக்கும்படியை யருளிச்செய்கிறார்.

தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமு
மூல வுடம்பா முதலொன்று - மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார்

இ - ள் தூலவுடம்பாய முப்பத்தோர் தத்துவமும் = ஆன்மாக்கண் மலத்தைப் புசிக்கும்பொருட்டாக அன்னமயத் தால் பரிணமித்த சரீரத்திலேகின் றிதுபரிணாமமாம்படி யிந்தச் சரீரத்துக் காரணமுமாம், ஆன்மாவிற்குத் தனுகரண புவன போகங்களுமாயிருக்கிற வான்மதத்துவ மிருபத்தினாலும் புரு ஷனுக்குக் காலநியதிகளுமாய், இச்சாஞானக்கிரியைகளை வீவிப் பிகைக்குக் கலைவித்தியாராகங்களுமாய், போகங்களிலேயழு த்துகைக்குப் பிரகிருதியுமாய், மயக்குகைக்கு மாயையுமாய் நிற்கிற வித்தியாதத்துவமேழுமாகத் தூலவுடம்பிலேபொருந்தி

விற்கிறதத்துவ முப்பத்தொன்றும்,—மூலவுடம்பா' முதலுன்றும் =இந்த மாயாதத்துவங்களைப் பிரேரிக்கவுங் கன்மங்களுக் கீடாக ஞானக்கிரியைகளை நானுதிக்கப்பிறப்பிக்கவும் வாக்குகளையெழுப்பவும் காரணத்துக்குத் திருமேனியாகவும் பதப்பிராரத்தத்திற்குப் பதங்களாகவுந்தோன்றி யுள்ளே மூலவுடம்பாயநின்று நடத்துகிற விந்துசத்திமுதலான தத்துவம் நாலும்,—மேலைச் சிவமாம் பரிசினையும்=இந்தத் தத்துவங்களுக்குக் காரணமுமா யான்மாவுக்குப் பிராணனுமாய் நிற்கிற சிவதத்துவ மொன்றின முறைமையும்,—தேர்ந்துணர்ந்தார் சேர்ந்தபவமாம் பரிசறுப்பார் பார்=ஆகவிந்தத்தத்துவ முப்பத்தாறும் ஆன்மா புசிக்கைக்குத் துணைக் காரணமாகத் தூலசூக்குமபரமாய் நிற்கையி லிந்தமுறைமையாசாரியனருளாலே ரூபதரிசன சுருதியுடனேபார்த்து நீங்கித்தன்னையும் ஞானத்தையுஞ் சிவனையுமுணர்ந்த சிவஞானிகளே யநாதியே பொருந்திப்போதுகிற சனனமரணங்களாகிற முறைமையைப் போக்கடிக்கிறவர்களாதலா லுனக்குத் திருசியமாதி விரோதமாக பிராரத்தத்தாலே பிரபஞ்சந் தோன்றினதாயினும் மிப்படிப்பார்த்துக் கூடுவாயாக. (௧௭)

இப்படிப் பார்க்க வரிதானவர்களுக்கு வேறேயுமொருபாய மருளிச்செய்கிறார்.

**எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவர்கோட் பாடுடையா**
**ரத்தனையுஞ் சென்றறங் களவாதே - சித்தமெனுந்**
**தூதுவனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்**
**பாதிதனைக் கும்பிடலாம் பார்.**

இ-ள், எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவர். கோட்பாடுடைய ரத்தனையுஞ் சென்றங்களவாதே = அநேகவிதமான தத்துவங்களையும் பலசமயிகள் கொண்டிருக்கத் தக்க கோட்பாடுகளடங்கலையுஞ் சென்றறியப்புகுந்து அவற்றிலே மொத்துண்டழியாதே,—சித்தமெனுந் தூதுவனைப் போக்கிப் போய்த் தூக்கற்ற

சோதிதனிற் பாதிதனைக் கும்பிடலாம்பார் = உன்னைச் சனன மர
ணங்களிலே தள்ளுகைக்கு அநாதியே தானாகி விசுவத்திலே
வாதனைப படுத்திபபோதுகிற சித்தவிகாரத்தை ஞானத்தாலே
யொழித்துச்சென்று ஒப்பில்லாத வந்த ஞானத்தைக்கூடி யிந்த
ஞானசத்தியை யொருபாதியாகவுடைய சிவனை வாக்குமனக் கா
ட்சிகள் கூடாதபடி யவன் திருவடியிலே யழுந்திநிற்கலாம், இத
னை விசாரித்துப்பார். (௩௮)

இந்த வுண்மையிலே கூடுமளவில உயிர்ச்சார்பு பொருட்சா
ர்பிற பற்றுவிடவேணுமென றருளிச்செய்கிறார்

சாமபொழுது மேதுஞ் சலமில்லை செத்தாற்போ
லாமபொழுதி லேயடைய வாசையற்ற- சோமபுதற்குச்
சொல்லுந் துணையாகுஞ் சொல்லாத தூயநெறிக்கட்
செல்லுந் துணையாகுஞ் சென்று.

இ-ள். சாமபொழுதுமேதுஞ் சலமில்லை செத்தாற்போலா
ம் பொழுதிலேயடைய வாசையற்ற = இப்படிக்கொத்த சிவ
ஞானிகளுக்குச் சரீரமவிடுவதாகிய சாக்காடு வந்தடுத்த காலத்து
அந்தச் சிவரூபமாயே விடுவதொழிந்து சற்றுந் தத்துவங்களாலு
ள்ள வசைவுகூடாது. இதற்குக்காரண மேதெனனில்? தேகநிற்
கிறபொழுதே தேகமில்லாதவர்களைப்போ லநாதியே வாதனைப்
பட்டுப்போதுகிற வுயிர்ச்சார்பு பொருட்சார்புகளிற பற்றடங்க
லும விடுகையால.—சோமபற்குச் சொல்லுந் துணையாகுஞ் சொ
ல்லாத தூயநெறிக்கட் செல்லுந் துணையாகுஞ் சென்று = இ
ப்படிச் சரீரநிற்கச்செய்தே யுயிர்ச்சார்பு பொருட்சார்பில் பற்றட
ங்கலும விடுமாகில் அதுதானே பணியறுத்த லெனகிற நிலைக்குச்
சொல்லப்பட்ட தொருதுணையாக நிற்கும், இதுவொழிந்துவாக்
கானுரைக்கப்படாத சுத்தநெறியாகிய வீட்டினபத்திலே பொ
ருந்துகிற வவதாரத்துக்கும் துணையாகாநிற்கும்.

இந்தவாறுறுத்தலு மவனருளாலே வேண்டுமென் றருளிச் செய்கிறார்.

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்**
**வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது - வேண்டினது**
**வேண்டாமைவேண்டவரு மென்றமையால்வேண்டிடுக**
**வேண்டாமை வேண்டுமவன் பால்**

இ-ள். வேண்டுங்கால் வேண்டும்பிறவாமை யென்றமையால் வேண்டினஃதொன்றுமே வேண்டுவது = தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்றருளிச் செய்கையாலே தேகமுள்ளளவு மிவன் விரும்பாதொழினும் பிராரத்தத்தாலே யுள்ளது கூடுமாகையால் ஒன்றைவிரும்பவேண்டியிடத்துப் பிறவாமை யொன்றுமே விரும்ப வேண்டுவது,—வேண்டினது வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக வேண்டாமை வேண்டுமவன் பால் = அந்தப் பிறவாமையானது தான் வேண்டாமை வேண்டவருமென்று பிரமாணமுண்டாகையாலே நாம் விரும்பத்தக்க கர்த்தாவின் பக்கலிலே பிறவாமைக் குறுப்பாகிய அவாவறுத்த லொன்றுமே வேண்டிக்கொள்ள வேண்டியது இந்த அவாவறுத்த லுண்டாகவே யந்தப் பிறவாமைதானே யுண்டாம்

இப்படி யுயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றற்றே சமாதி பண்ணுகவும் நிற்கச்செய்தே சமாதியிலேகூட விசாரித்தார்களுக்குச் சமாதிகூடாமல் நினைவுகூடி யிதனாலே சந்தங்கள் கூடுமுறைமையை யருளிச்செய்கிறார்

ஆரண வுணர்வுதனி லவ்வுணர்வை யாறறிற்
காரணமுங் காணுங் கைகூடும் - பூரணமாக்
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூடினுங்கு
வாராமை யுங்கூடும் வந்து.

இ-ள். அரணவுணர்வுதன்னி லவ்வுணர்வைமாற்றிம் காண முங்காலுங்கைக்கூடும் = இந்திரிய வேட்டசென் றீடுகொள்ளப் படாத புகலிடமான திருவடிஞானத்திலே தன்னுடைய போதத்தை யொழிக்க விசாரிப்பானாகில் அந்தவத்தரத்திலே முன்பு தான்பற்றிப் போந்த வுயிர்ச்சார்பு பொருட்சார்பின் வாதனையாலே சொரூபமானது கைகூடாமல் மறுதிகளும் பிராணவாயுவுங்கூடி மீண்டு விடயாதிகளிலே சலிப்பினுஞ் சலிக்கும்.—புரணமது கூடாமையுங்கூடும் = இது கூடாமற் புரிந்து மடக்கமவந்து கூடினுங்கூடும்,—கூடுதலுங் கூடினுக்கு வாடாமையுங்கூடும் வந்து = இப்படிப்பயக்க விகற்பங்கூடிப்போதமே யெடுத்த தேகம்போனாலு மிந்தப்பற்றுக்களாலே மீண்டுமொரு தேகமவந்து கூடாநிற்குமாதலா லிது கூடாதபடி வுயிர்ச்சார்பு பொருட்சார்புகளில் பற்றுக்களையற்றே சுகரூபத்திலே பொருந்தி நிற்பதாக. (௪௧)

சமாதிபாரணைக்குங்கரும பற்றுக்களாலே சமாதி கூடாமல் சாநங்கள் கூடுமாகில் சிந்தைக்ஷ்பும தரிசனமில்லாத வானமாக்கள் மரியாதையோ விவனுக்குப் பெற்றுள்ளதென்று கேட்டமாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்,

இன்றிங்க சேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே-யென்றுந்தான்
நீந்துவ னன்ற சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று

இ-ள் இன்றிங்க சேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ் சென்றுதொடருமவன்சென்றிடத்தே = இப்பொழு திந்த தேகத்திலே நிற்கச்செய்தே கூடின வசேதனமான புண்ணியபாவங் களிரண்டு மிவன் பின்னொருதேகத்தை யெடுத்தபொழுதே யொக்கச்சென்று கூடாநிற்கும்,—என்றுந்தான் நீந்துவ னன்றே

சிவபதிதான் கைவிடுமோ மாதொரு கூறல்லனோ மற்று = ஒருவன் சிவதீக்ஷையும் சிவஞானமும்பெற்றுத் தெளிந்திருக்கச்செய்தேயும் முன்புபோல வுயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றுவிடாமற் சங்கடிற்றாயினுங் காத்தாவாகிய சிவனு மிவனைக் கைவிடாமல் முன்புண்டான மனம் பற்றுகைக்குத் தக்கவற்றைக் கூட்டித் தொலைப்பித்து முற்சந்ததிலே சாதித்தக்குறையிலே வந்தெடுத்துக்கொண்டு நிட்டையிலேகூட்டிச் சாயுச்சியத்தைக்கொடாநிற்பன். இவன் காருண்ணிய சந்நிதியினை யெப்பொழுதுந் தன்னிடத்திலே யுடையனாதலால்.

இன்னமும் ஆன்மாக்களுடைய பெத்தமுத்தி யிரண்டினுமிவர்களைப் பாதுகாத்து ஈடேற்றுகை யநாதியே கர்த்தாவுக்குக் காரணமான முறைமைதோன்ற வருளிச்செய்கிறார்.

அநாதி சிவனுடைமை யாலெவையு மாங்கே
யநாதியெனப் பெற்ற வனுவை - யநாதியே
யார்த்த துயரகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண்.

இ-ள். அநாதி சிவனுடைமையா லெவையுமாங்கே = அநாதியான சிவனுக்கு எண்ணிறந்த வான்மாக்களு மடிமையாகை யாலே யிந்த வான்மாக்களு மப்படியே,—அநாதியெனப் பெற்றனுவை யநாதியே யார்த்ததுயரகல = இப்படி யநாதியான வான்மாக்களை யநாதியே பேதித்துக்கொண்டு நிற்கிற பாசமானது விட்டு நீங்கும்படி,—அம்பிகையோ டெவ்விடத்துங் காத்தலவன் கடனேகாண் = விட்டு நீங்காத சத்தியுடனே பெத்தத்திலுங் கூடிநின்று தொலைப்பித்து முத்தியினுமீண்டு மொருடம்பு கூடாதபடி திருவடியிலே கூட்டிக்கொள்ளுகிற விது மனைவனே? யவனுக்கு மநாதியே முறைமைகாண்.

தேகாதிப்பிரசமனாதியாகில முத்தியிலும்போகாதே யென்று சந்தேகித்தமாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பா மஞ்சனநீ ராட்டித் - தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தார்
மேவாமை யன்றே யுடல்.

இ - ள் தம்மிற் சிவலிங்கங்கண்டு = ஆசாரியனாலே தனுகரணபுவனபோகங்களை விட்டுநீங்கித் தன்னைத்தரிசித்துத் தன்னிடத்திலே தனக்குப்பிராணனுமாய்ச் சிவனுக்கடையாளமுமாய் நிற்கிற ஞானமாகிய சிவலிங்கத்தைத் தரிசித்து,—அதனைத்தாம் வணங்கி = அந்தச்சிவலிங்கத்தைத் தம்முடைய போதம் விட்டுப்போம்படிச் சாஷ்டாங்கமாகிய வணக்கஞ்செய்து,—தம்மன்பா மஞ்சனநீராட்டி = இப்படிப்பெறுதற்கரிய பேற்றைப்பெற்றோமென்கிற சிரத்தையாகிய சலத்தாலே திருமஞ்சனம் பண்ணி,—தம்மை யொருபூவாகப் பூவழியாமற்கொடுத்து = இப்படிச்செய்கிற வான்மசொரூபத்தை யொப்பில்லாத் திருப்பள்ளித் தாமமாக மயங்காமற்சாத்தி,—பூசித்தால் = இப்படி ஞானத்திற் சரியை கிரியா யோகங்களினாலே உள்ளே சிவனைக்கண்டடைகி யுஞ்செய்கிறவிது,—மேவாமையன்றேயுடல = செம்புருகின பதத்திலேகூடின குளிகையினது ஐக்கியத்தாலே யநாதியான களிம்பு தமுழு செம்பொன்னுருவமுநீங்க மாற்றுப்பிரகாசித்துப் பின்பினையென்றுங் கூடாதவாறுபோல வொருவன் தன்னுடைய சத்திநிபாதத்திலுண்டானவன்பின்மிகுதியாலே தேககிரியாதிகளை நீங்கின தன்னுடைய வுண்மையான சொரூபத்தைத் தனக்கேற்பப்பெறுத் தன்னிடத்திலே சிவனைக் கண்டடைகியஞ்செய்து வாதனைவிட்டால பிராரத்தசமபிறந்து தேகம் விட்ட பொழுதே திருவடியிலே யிரண்டற்றுவிடுமெதொழிந்து மீண்டு தேகமெடுக்கவல்லவே. (௪௪)

அஞ்ஞானபாசம்விட்டு நீங்குமாகி லநாதியென்று ஆன்மாவுக்கு வழியுண்டாமோவென்ற மாணாக்கனை நோக்கிப் பாசத்திலேயிருந்த போதத்தைவிட்டுத் தன்னைத் தனக்குறுதியாகப் பெறுகிறதொழிந்து இவனுக்கழிவில்லையென்றும் பாசத்தை நீங்கினபொழுதே யிவனும் வியாத்தனென்னும் முறைமையுமருளிச் செய்கிறார்.

தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லைத் தானென்றுந்
தன்னைத்தான் பெறுவனன்றோ தானென்னிற்-றன்னாலே
யெல்லாந்தனுட்கொண்டு கொண்டதனைக்கொள்ளாதே
யெல்லாமாய் நிற்கு மிவன்.

இ-ள். தன்னைப்பெறுவதின்மேற் பேறில்லை = ஒருவன் பெறத்தக்க பேறுகளிற் றானழிந்துபோகாம லருளாலே தன்னை யுறுதியாகப்பெறுகிற பேற்றின்மேல் வேறொரு பேறில்லை,—தானென்றுந் தன்னைத்தான் பெறுவனன்றோ வென்னில் = தானென்றுந் தன்னைத்தான் பெறுவனென்று மிரண்டாக விட்டுத்திறஞ் சொன்ன தானென்னில்,—தன்னாலேயெல்லாந் தனுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே யெல்லாமாய்நிற்குமிவன் = ஆன்மா தன்னையறியாமல் மூன்று பாசமேயாய்நின்ற முறைமை யொழிய அருளாலே பாசத்தையுமறிந்து பாசத்தையுமறிந்த இந்தப்பாசத்தையொழிந்ததுபோல இதையுமொழியவிட்டுத் தன்னுடையபோதஞ் சலியாமற் பூரணனாய்நிற்கவே யெல்லாவடிவுகளுந் தன்னுடைய வடிவாய்த்தானே யிருக்கவுண்டாண்ட பகிரண்டத்துக்கெல்லாங் கர்த்தாவாய்நிற்பனிவன்றான். (௧௫)

இத்தன்மையபோதந்தானே பொருளாயில ஞானயோகஞ் சிவயோகமென்று சொல்லவேண்டுமோ வென்ற மாணாக்கனை

யிந்தவானமயோகந்தானே ஞானயோகமாமபடி யருளிச்செய்து
இந்த ஞானயோகந்தானே சிவயோகமாமபடி யருளிசசெயகிறா

துனபமா மெலலாம பரவசஞயத தானறிவளி
லினபமாந தனவசஞயத தானிருககி - லெனபதனு
னினவசஞ யேயிருககி னினனுடனு நேரிழையா
டனவசஞ யேயிருபபனா ரூன.

இ - ள் துனபமாமெலலாம பரவசஞயத தானறிவளில=
ஆன்மா தானே காததனு மெலலாவறறையு மறிகிறுனுக கினறு
விகறபிககி லிமமை மறுமை யிரணடிககும பிரயோசனமாகவுள்
ளது கிலேசமொழியவேறிலலே,—இனபமாந தனவசஞயததானி
ருககில = ஞனயா திரிவுகாக்ஷியான பிரபஞசந்தியை விட்டுநீங்
கித தனககு உணமையான சைதனனிய சொருபமா யிதிலே
நிருவிகாரமாயிருக்கி லிநதவானமயோகநதானே ஞானயோகமு
மா யிநதவழியிலே சுகருபம வநது பிரகாசியாநிறகும,—எனபத
னுல = எனறு வேதாகமஙகளுககுங கருததாகையால்,—நின்
வசஞயேயிருகக நினனுடனுநேரிழையா டனவசஞயே யிருப்
பனரூன = மாணவகனே ? இநதிரிய வசஞகாமல் நீயு முன்
னையொழிநத பொருளக ளெலலாவறறையு முனககு வேறென்
றறிநதுவிடடு நீஙகி நிருவிகாரமான ஞானமே சுகருபமாயிரு
ககி லபபொழுதே யநத ஞானசததியின வசமாயிருககிற ஞேய
சொருபனுனசிவ னுனனைககூடி வேறற நிறபன. (௬௯)

இநதச் சிவயோகததிலே யிடைவிடாம லநுபவிததலாவது
இநதக கருவி கரணஙக ளொருகாலமும கூடாதபடி யருளிலே
நிறக வலலவாகளுககேயெனறுந தோனறவருளிசசெய்கிறூர்.

செததாரே கெட்டார கரணங்கள சேர்ந்ததேனு
டொததாரே யோகபா ராணவாக - ளெத்தானு
மாராத வக்கரணத் தாபபுண்டிங கலலாதார்
போமற செலவாதனபின்.

இ - ள். செத்தாரே கெட்டார் கரணங்கள் = அந்தக்கரணங்கள் கொராக வெருரியாதபடி ஞானத்திலேகூடி மறிந்தவான மங்களே சகமரணங் கெட்டவர்கள், — சேர்ந்தன்றேசெத்தாரே யோகபரானவர்கள் = இந்த ஞானத்தி னழுந்தத்தினாலே பிரகாசித்த சொரூபத்திலே பொருந்தியதுவாய நின்றவர்களே சிவயோகத்தில் தாற்பரமானவர்கள் — எத்தாலு மாராத வக்கரணத் தாற்பண்டுங் கல்லாதார்போராமற் செல்வர்தன்பின் = இப்படிச் சிவயோகத்தில் பொருந்தப்பெறாத பாக்கியமீன ரெத்தனாலுந் திருந்தியடையப்பெறாத கருவி கரணங்களாலே கட்டுண்டு இவற்றின் பின்னே தப்பாமலே வசஞ்செய்து சனன மரணங்களிலே செற்றுழலாநிற்பார். (௪௭)

இத்தக்கருவிகரணங்க ளொருகாலமும் பொருந்தாதபடி நிற்கிறசிவயோகிகள் பெருமை யிருக்கும்படி யருளிச்செய்கிறார்.

கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயுங்
கண்ணுங் கருத்துங் களிகூர - நண்ணி
வட்டமட்டகி நிற்கும் வட்டவிர்ந்தே போல
வுட்டணட்கி நிற்பர்கள் காணுற்று.

இ - ள். கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயுங் கண்ணுங் கருத்துங் களிகூர நண்ணி = யாவர்களுங் கண்ணுக்கும் கருத்துக்கு மளவுபடாத தொரு பேற்றையினுடைய சிவஞானிகள் சிவனுடனே யிரண்டறக்கூடி பரமானந்தமே சொரூபமாயிருக்கையாலு மவர்கள் கண்ணில் விகாரமில்லையாகையாலு மொடுக்கினும் விழிப்பினும் பொருளேயாயவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் களிகூறப்பொருந்தி, — வட்டமட்டகி நிற்கும் வட்டவிர்த்தே போல வுட்டணட்கி நிற்பார்கள் காணுற்று = அநேக தாரம்பட்டாகத் தோராலின் பரிணமமெல்லா மொருக்கிலேயொத்த விந்திலே யடங்கின தன்மைபோல அளவிடப்படாத வஸ்துவாயினும் தம்

களுள்ளே யடங்கித் தங்களாணவ சுபாவத்தைவிட்டு இதச் சிய மாகியே நிலவாநிற்பார்கள். (௩௮)

அளவிடப்படாத பொருளை யோருடம்பிலே நிற்பானொரு வனடக்கிக் கொண்டிருந்தபடி யெப்படி யென்று மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
யூனகத்தே யுன்னுமதெங் கென்றனையே - லேனைத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா
மாதனமே யென்றே வறு

இ - ள், வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை யூனகத்தே யுன்னுமதெங் கென்றனையேல் = ஆகாசமுதல் பிருதிவி யீறாகவுள்ள பஞ்சபூத பரிணாமமான பிண்டப் பிரமாண்டங்களு மிவற்றிற்குக் காரணமான தத்துவங்களு மிதற்குட்பட்ட வானமகோடிகளுந் தானேயாய்ப் பூரணமாய் நிற்கிற சொரூபத்தை யொருசரீரியானவன் தனக்குள்ளேயடக்கி நினைத்தபடி யெப்படியென்னில்,—ஏனைத்து வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா மாதனமேயென்றே வதற்கு = மாணவகனே ? பிருதிவி முதலாக முன் சொல்லப்பட்டவை யெல்லா மந்தப் பொருளுக் காதனமாத்திர மல்லவோ வாகையாலும்ப் பொருளை யாசாரியனாலே கூடப்பெற்றவர்களிடத்தி லந்தப்பொருளின் வியாத்தமெல்லாநின்று பிரகாசிக்கையாலும் ஞானதிருஷ்டி யில்லாதவர்களுக்குச் சரீரிகளைப்போலத் தோற்றினு மவனந்த வண்மையேயாய் நிற்பாருண்மையாலு மென்போல்வாரிடத்து மனாதியே கூடிப் போந்த வாதனையைப் போக்குகைக்கு இந்தநிலையே காரண முறைமையாகவுள்ளது. (௩௯)

இந்தப்பொருளை யுள்ளே கண்டு வாதனை நீக்கிருப்பவர் போற் புறம்புங் கண்டு வாதனை போக்கலாமோ வென்ற மாணாக் கனை நோக்கியருளிச்செய்கிறார்.

கல்லிற் கமரிற் கதிரவா ளிற் சாணையின்கல்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - சொல்லு
மகம்மாகக் கத்தாலவர்கள் மாற்றினார் காணையா
சகமாகக் கத்தாலன்றே தான்.

இ-ள் கல்லில—தான = கல்லிலுங் கமரிலு மொளியை யுடைய வாளினுஞ் சாணைக்கல்லிலு நெத்தைப்பலகையிலுந் திருக்குறிப்புத்தொண்டர் முதலாகவுள்ள நாயன்மா ரோரவொ ருதொழில்களைச் செய்யச்செய்தேயு மவற்றைச் சொல்லப்பாக ரிலவர்களுஞ் சிவனளவி லொருமுழிபட்ட கருத்தினாலே யல் லோ வவர்களுக்குப் புறம்பேயும் பிரகாசித்துப் பிறப்புக்கு வித் தான வாதனையைப்போக்கினார்கள், ஐயனே' இந்த முறைமை பொய்யான வுலகநெறியல்லவே (௫௰)

இந்த விரண்டுவகையாலு மெதிலேயின்று வாதனை போ கலாமென்ற மாணாக்கனை நோக்கி யத்தனை யிரண்டுவகையாக நீ கருதவேண்டாமென்று மொருபடித்தாகக் காணவேணுமெ ன்று மருளிச்செய்கிறார்

உள்ளும் புறம்பு நினைப்பொழியி னுண்ணிடையே
வள்ள லெழுந்தருளு மாதிறனோடு - தெள்ளி
யறிதொழிவா யனறியே யன்புடையை யாயிற்
செறிதொழிவா யேதேனுஞ் செய்.

இ-ள் உள்ளும் புறம்பு நினைப்பொழியி னுண்ணிடையே வள்ளலெழுந்தருளு மாதிறனோடும = உள்ளேகாண வேணும் புறம்பேகாணவென்று நீ விசாரித்த விடத்து உன்னுடையபோ தத்தையுஞ் சரீரத்தையு முன்புபோலே கைவிடாதுகொண்டு இரண்டுபட்டுத் தோன்றினதொழிந்து அந்தப்பொருளுக்குத் தனித்தனி ஓரிடமா யிராதாகையால் பிண்டப் பிரமாண்டங் களையுந் தத்துவங்களையு மான்மபோதத்தையும் ரூபதரிசனசுந்தி

யாலே யருளாக்கி யொருநிலையான ஞானமேயா யுன்னினை யொழியநிற்கி லப்பொழுதே யுன்னிடத்திலே பரமசிவனானவர் தன்னுடைய காருண்ணிய சத்தி யுடனே கைம்மாறு கருதாமல் வந்து தோன்றி யுன்னை ஒருதன்மையாக்கிக்கொண்டு தானேபிர காசியாநிற்பன்—தெள்ளியநிக தொழிவாய=இதனைச் சிவயோ கத்தின் கண்ணே நின்றாராய்ந் தநுபவிக்கிறோ மென்கிற தன் மையுங் கைவிட்டு நின்றாயாதல்,—அன்றியே யன்புடையையா யிற் செறிந்தொழிவாய = இந்த முறைமையல்லவாகிற சிவனு டைய வுண்மையைக் கேட்குதல் நினைக்குதல் காண்குதல் செய் தபொழுதே யுன்னுடைய கருத்தை யுருக்குவதான தொரு பேர ன்பு கூடுமாயி னதனாலே யுன்னுடைய கருத்தானது நேராக வழிந்து சிவனுடனேயொரு நீர்மையாய விட்டாயாதலால்,— ஏதேனு நெய=இந்த ஞானயோகத்திலும் பத்தியோகத்திலு மி வ்விரண்டினுங் கூடின நெறிச் செய்வாயாக (௩௧)

இனியிந்தப் பத்தியோகந் தானப்படியென்ற மாணுக் கனை நோக்கிப் பத்தியிலே நின்று பெற்றவர்கள் பெருமை இப் படியென் றருளிச்செய்கிறார்

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியி மன்பன் றது.

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க - வவிழ்ந்தடை
வேந்தனுக் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

சாந்த திருமுலைக்கே தூய்யசிவ ஞானஞ்
காத்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சாத்த
தனமுடையா டென்பாணடி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளென்பிருக்க வாறு
அன்பேயென னன்பேயென றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு - மன்பன்றித்
தீர்த்தத்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும பழமன்றே தான்.

இ - ள். இப்படிப்பட்ட பத்தியோகத்திலே விட்டகுறைக ளாலே சிவனுடைய வுண்மையை நினைத்தல் கேட்டல் காணுத ல் செய்தபொழுதே கரையழிந்த வன்பினாலே யொருபலத்தை யுங் கருதாமலந்த வன்புதானே தங்களுக்குச் சுரூபமாகநின்று தன்னை மறந்து பேறுபெற்ற கண்ணப்பநாயனார் முதலாயுள்ள நாயனமா ரனைபையொழிந்து தீர்த்தங்களுந் தியானங்களு மர்ச் சனைகளு மிப்படி யவதிகொடாமல் பேறுகூட்டமாட்டா தா கையா லவையுமிந்த வந்தமமானபத்தி கூட்டுதற்குவிரதாக இத னைச்செய், (௬௨)

இனியாவர்க்கும் பத்திகூடுதற் கரிதென்று முறைமையிலே 'கூடத்தக்க ஞானயோகமே யானந்தத்தைக் கொடுக்கும் முத்தியைத் தருவதென்று முன்னே பலபிரகாரங்களாகச் சொல்லப்பட் டுபாயங்களுந் தாற்பரிய மிதுவேயென்று மற்றுள்ள சமயிகள் தாற்பரியங்களிந்த வுண்மையைக் கூடமாட்டாதென்று மெல் லாவற்றையுந் தொகுத்து மானந்த நிட்டைக்கு ஞானயோக மே பொருளென்று துணிய வருளிச்செய்கிறார்.

எல்லா வறிவுகளின் மேற்பட்ட மெய்யறிவு
செல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தேன் - வல்லபடி
யாதனையு மாற்று மவைநினைவிலே பற்றற்று
வேதமறக் கண்ட விதம்.

இ - ள். எல்லா - விதமான மாணாக்கனே? இந்த நூலிற் சொல்லப்பட்ட வுபாயமொழிந்து வேறு மறியவேண்டுவ துண்டோவென்று நீ சந்தேகிக்க வேண்டுவதில்லை, எல்லாச்சமயங்களினு மெல்லாச் சாத்திரங்களினு முண்டான தாற்பரியார்த்தங்க ளொன்றலாராயத்தக்கவளவு மாராய்ந்தறிந்தேன், அவையெல்லாவற்றினும் யாதணையைப் போசமுத்தியைக் கூட்டுவிக்கு முறைமையாகக் கண்டது சைவசித்தாந்தத்திற் சொல்லப்பட்ட விந்தஞானயோக மொன்றுமேயாதலா லிந்த வநுபூதியெல்லாக் குற்றங்களுந் தருகைக்குக் கண்டவாத்தமாதலின் நீயுமிந்த முறைமையிலே சாதிப்பாயாக, (௫௬)

இனியிந்த வத்தத்தைப் பெறுதற்கரிய முறைமையும் பெற்றால் நிறக்கவரித்தான முறைமையு மருளிச்செய்கிறார்.

வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெஞ்ஞானம்
வித்துமத னங்குரமு மெய்புணரில் - வித்ததனிற்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலறமா பேறு.

இ - ள் வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம் = நெல்லுமுதலான பலவித்துக்களு முளைக்கும்பொழுது அங்குரத்துடனிரண்டுபட்டு நில்லாமலந்த வங்குரமுள்ளளவும் வியாத்தமாய் நின்று பரிணமித்து இந்தப் பரிணாமத்தைப் பிரயோசனங் காரணமாக வங்குரித்த நாணமுத லாசரித்துக்கொண்டிருந்த ஆன்மாக்களுக்குப் பரிணாம முதிர்ந்த அந்தக் காலங்களிலே வித்தானது வெருவிதமாகப் பலித்தவர்கள் தாங்களிக்ஷயிப்பித்துச் சந்துஷ்டிப் பிறப்பிக்க வின்பத்தையே கொடா நிற்கும் அதுபோல வித்தான சிவமும் ஆன்மாக்களுக்குக் கன்ம வொப்பு மலபாகமு முண்டான வவதாரத்திலே காருண்ணியமே திருமேனியாக வெழுந்தருளிவந்து பக்குவப்பட்ட வான்மாக்களை

த்தமுடைய வெளியிலே சினேகித்துமபடியுந் திருவுள்ளத் தடைத்து இவர்களிடத்திலே யநாதியே யெழுந்தருளிநின்ற வுண்மையையும் பிரகாசிப்பித்து இந்த வுண்மையான ஞான சுரூபத்திலே யானமாக்களையுங் கூட்டிநிறுத்தி யிந்த நிலையின் முதாசசியாலே தன்னுடைய சுகரூபமான பேரின்பத்திலே யிவர்களநுபவித்துச் சம்பூரணத்தை யடையும்படி பெருபலமாகக் கொடாநிற்கும்,—வித்தும தனங்குரமு மெய்யுணரில=இந்த வித்தாகிய சிவனுண்மையு மங்குரமாகிய ஞானத்தினுண்மையு முணர்வாருணருமிடத்து —வித்தித்தற கருமையா லதனைக் கைவிடுவா=நெலலு முதலான வங்குரங்களை யிந்தவித்தின பரிணாமமென்று மிந்தப பரிணாமங்களிலே யந்தவித்துக கலந்துநிற்குமென்று மங்குரத்தின பரிணாம முதிர்ந்தபொழுதே யந்தவித்தே பெருபலமாகப பலிக்குமென்று மிதனை யாசரித்துக்கொண்டிருந்து பலிப்பிக்குங் காலங்களிலே பலங்கொள்ளவறியாம லங்குரம பரிணமிக்கிற காலத்திலே விரதுதோனறுந்துகொண்டு இந்தப பரிணாமத்தி லோவித்துங் கண்டிலோமென றந்தப பரிணாமத்தையுங் கைவிட்டு அதினுடைய பிரயோசனமு மிழந்துபோகிறபடிந்தனைப்போலத் தரிசித்து ஞானத்திலேநின்று சாதித்து இந்த ஞானமேயாய இந்த ஞானத்துக்கு முதலாகிய சிவனைக்கூடிய பேரின்பத்தையே பெறமாட்டாம லந்த ஞானத்தைத் தரிசித்தவளவிலே யிவ்வளவே பிரயோசனமென்று சுரூபத்தி னுண்மையை யறியாம லந்தஞானத்தையுங் கைவிட்டுப்போன பாக்கியமீனா சிவயோகத்தை யிழந்துபோகிறார்கள்,—கண்டவாதன் பேறுமையாலறஞாபேறு=அந்த நெலலுமுதலான வங்குரங்களிலே வித்துகலந்து நிற்குமென் றறிந்தவர்களும் பயன்படுமளவு மந்தப பரிணாமத்தை யாசரித்துக்கொண்டிருந்து பிரயோசனப்படுங்காலங்களிலே பிரயோசனங் கொள்ளமாட்டாமல பராமுகத்தாலே யதின் பிரயோசனத்தைப் பெறக்கொள்ள தாமிழந்து போகிற பாக்கிய மீனரைப்போலச் சிவனைத்தாரமாகவொழிந்து

ஞானம்பிரகாசியாதென றறிந்தவர்களுமந்தஞானத்தைக் கைவிடாமனின்று விசுவத்தைக் கைவிட்டு மந்தஞானமாகவே சாதித்துஇந்த ஞானத்தி னேகியத்தாலே சிவனைப்பெற்றுப் பேரின்பமே யநுபவித்துத் திருப்தியடையமாட்டாமல் வாதனையின் மிகுதியாலே பராமுகமாய்த் தாமபெற்ற ஞானத்தினைப் பின்புநுபவிக்கலாமே யென்றும நித்தத்தத்துவமபெற்று மிருப்பாரைப் போல நெகிழ்ந்திருந்தவர்கள தமக்குப்பேறுன சிவயோகத்தை யிழந்துபோகாநிற்பர்கள் ஆதலாலநீயுமிந்தத்தவத்தைப்பெற்றே மென்று காவியாய்ப்போகாதே யிடைவிடாமல் ஞானமாய்நின்றே சாதித்துப் பின்பிந்த ஞானத்தி லுறுதலாலே ஞானமானது நந தலைமன்றையப பலிக்கத்தக்க சிவபோகத்திலேயழுந்தி யநுபவிப்பாயாக. இதற்குப்பிரமாணம திருமந்திரம்—" வித்தினிலன்றி முளையிலலையமுளை, வித்தினிலன்றி வெளிப்படுமாறில்லை, வித்துமுளையு முடனலலவேறலல, வத்தனமைத்தாகு 'மறநெறிதானே" (௫எ)

இந்தச் சிவரூபந்தனனை யெப்படி யறிவேனென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று - நின்ற
நிலையன்று நீயன்று நினைறிவு மன்று
தலையன் றடியன்று தான்.

இ - ள். ஒன்றன்று = எல்லாப் பொருள்களுங் கரைந்த விடத்திலே யுதிப்பதொன்றுகையாலே யெல்லாப்பொருளுந் தானே யொன்றாயிருப்பதுமன்று,—இரண்டன்று = தன்னிடத்திலே சுட்டறவிளைகிற வத்துமாகையினுலே யிரண்டாயிருப்பதுமன்று,—உளதன்று = வாக்குமனதீதமா யிருப்பதொன்றுகை

யாலே பிரத்தியக்ஷமா யிருப்பதுமன்று,—இலதென்று = ஞான வான்களுக்கு ஞானயோகத்தின் முதிர்ச்சியிலே பரமானந்தத் தையளித்து நிற்கையாலே யில்லாத பொருளுமன்று,—ஒன் றென்றிதனை=ஆன்மபோதம் பிறந்தால் கூடும்பொருளாகையா லே ஆன்மாக்களால் ஒன்று இதன்று சுட்டப்படுவதுமன்று,—நானென்று=நானே பிரமமென் றலங்கரிக்கிற பசுஞானமன்று,—நின்றநிலையன்று=அநாதியேதொடங்கி யின்றளவும் நிலையான பாசஞானமன்று,—நீயன்று = பசுஞானத்தையும் பாசஞானத் தையுமுடைய ஆன்மாவுமன்று,—நின்னறிவுமன்று=உனக் கறி வாய்நிற்கிற ஞானமுமன்று,—தலையன் றடியன்றுதான் = ஆதி யந்தமில்லை யந்தச் சிவசொரூபத்துக்கு. (௫௮)

இப்படி நிச்சயார்த்தமா யிருப்பதொன்று கூடும்படி யெப் படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

செய்யாச் செயலிலவன் செய்யாமை கண்டதனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினால் - எய்யாதே
மாணவகவப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கு
மாணவமு மித்தா லறி.

இ-ள்: செய்யாச்செயலிலவன் செய்யாமைகண்டதனைச் செய்யாச்செயலிற் செலுத்தினால்= ஆன்மாவினிடத்திற் பக்கு வத்திலே விளைந்த பரமானந்தத்தை யான்மாவறிந் துண்டாக் கிக் கொண்டதுமல்ல சிவன் விகாரியாய்நின்று கொடுத்தது மல்ல ஞானமானது கண்டவிடத்திலே பிரகாசிக்கிற படியை யறிந்து இந்தப் பரமானந்தம் பிரகாசிக்கிறபொழுதே விதுவுந் தோன்றும லதுவே சுகரூபமாய் நிற்கும்படி யந்த நினைவா னதவிழ்த் தானுமந்த நிராலம்பமேயானால்,—எய்யாதே மாணவக வப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கு மாணவமு மித்தா லறி=மாணவகனே ? சகத்துக்குக் காரணமாகவுங் குறிக்கப்ப

-ரின்ற வாசனையாகிற கொடிகளை வளர்க்கப்பட்டாநின்ற மூலமலமாகிய ஆணவமல மப்பொழுதே வேறற்று விடாநிற்கும் நீ யொன்றுக்கு மஞ்சாதே இப்படி யறிவாயாக. (௫௧)

இந்தப்பொருளை சாதிப்பா னொருவனுக்கொரு செயலுங் கூடவொண்ணாதபடியாலே யவனுக்கொரு நியமம் வேண்டா மென றருளிச்செய்கிறார்.

ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமா
மேதேனுந் திக்கா சனமுமா - மேதேனுஞ்
செய்வா னொருவனுமாஞ் செய்யாச் செயல்தனைச்
செய்யாமை செய்யும் பொழுது.

இ - ள். ஏதேனு - பொழுது=ஆன்மபோதமுள்ளளவு மிந்த ற்கறிதாகிய வாதநிராலம்பமான வுண்மை ஒருவன்தன்செய லன்றியே கூடுமிடத்து மின்னகாலமென்னும் மெல்லாக்கால முமா மெல்லாத தேசமுமா மெல்லாத திக்குகளுமா மெல்லா வாதனங்களுமா மெல்லாத தொழில்களினு நிற்பா னொருவனு மாம்.

இனியிந்தச் சிவயோகத்தை வெளிதாகச் செய்வதாயிருக் கச்செய்தே செய்யாதிருக்கிறபடியு மிந்தச் சிவயோகத்தின் பெருமையு மருளிச்செய்கிறார்,

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசில
ரெய்தற் கரியதனை யெய்தினார் - ளையோகாஞ்
செய்யாமை செய்துஞ் செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

இ - ள். செய்தற்கரிய செயல்பலவுஞ் செய்துசில ரெய்த ற்கரியதனை யெய்தினார்கள்=சிலர் காத்தாளைநோக்கித் தீங்கள் சரீரத்தையு மனத்தையும் வருத்தி யாவராலுஞ் செய்தற்கரிய

செயல்கள் பலவற்றையுஞ்செய்து பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றார்கள்,—ஐயோ நீரும் செய்யாமைசெய்து செயலற்றுக் கலாயிருக்கச் செய்யாமைசெய்யாதவாறு = என்னே மாணவகனே! எல்லாவிகற்பங்களு மொழிந்து நிர்விகாரமான சுபாவத்தைப்பொருந்திச் சுகதுக்கங்களிலே மொத்துண்பதான சனனமரணங்களை வேறுத்துவிடலாயிருக்க விந்த நிர்விகாரமான வுண்மையை நீ செய்யாதிருப்பதேதால். இப்படிப் பொதுப்படச் சொன்ன விந்த வுண்மையை யிவன் நெகிழாமல் விளைந்துகூடுகைப் பொருட்டாக வுபாயமாகவே யருளிச்செய்ததெனக்கொள்க. (௬௧)

இந்த வுண்மைக ளொன்றுமறியாத விசுவத்தார் படுகிற கிலேசத்தைக் கண்டு மேலொன் றருளிச்செய்கிறார்.

இப்பொருளைக் கியாதேனு மேதெனினு மொன்று
செய்த, பலபொருளுஞ் செய்யா தொழிந்திருந்தன்
மெய்ப்பொருளைக், கண்டிருந்தல் செய்யாதே கண்ட
புனிதரெலா, முண்டிருப்ப தென்னோ வுரை.

இ - ள். இப்பொருள்—உரை = மாணவகனே! எண்ணிறந்த வான்மாக்களிற் பெறுதற்கரிய மகல்யாகங்களையும் பெற்ற வான்மாக்கள் சிவனை நோக்கி மெல்வினையென்று சொல்லப்பட்ட சரியையாதல் கிரியையாதல் வல்வினையாதல் லாதாரயோகங்களாதல் இவற்றிலே யாதொன்றைச்செய்து விளைவெய்துமுறையுஞ்செய்யாத நிராதாரயோகத்தைச் செய்திருத்தல் இந்தவுண்மையான பொருள் நிற்கிற முறைமை யறிந்து தானுமந்த வுண்மையிலே முறைமையாகப் பார்த்துக் கூடியிருந்த விந்தமுறைமைகளிலே யொன்றைச்செய்து பெறுதற்கரிய பேறுகளைப் பெறுகிற தாந்தாம விரும்பப்பட்ட தேகங்களும் மத்தைகளும் நிலையில்லாதபடி கண்டுபோதுகிற வான்மாக்க ளெல்லாருந்

தேகங்களைப் போற்றிநின்று இதரவிதங்களைப் புசித்து அஞ்ஞான மெஞ்ஞானமாய்ப் போதுகிறவிது என்னகாரணத்தால் இதனை நீ சொல்வாயாக. ஞானத்துக்குப் பக்குவரல்லாத வாசனமாக்களை நோக்கி யொன்றருளிச் செய்தாராக வருளிச்செய்த விதுவும் சாவானமாக்களுக்கு கிட்டாத பொருளுனாலுடைய பாக்கியத்தினாலே கிட்டின விதனைக் கைவிட்டு வாதனையைக் கைவிடாமல் நின்று இந்திரிய வேட்கை கழிமையாய்ப் பேறிழந்து போகாதே இந்தவுண்மையிலே யிடைவிடாமல் நின்று சாதிக்கைப்பொருட்டாக வந்திய வுபதேசமாக வருளிச்செய்த தெனக்கொள்க (௯௨)

இனிச் சீடனைப்பார்த்து ஒன்றருளிச்செய்கிறார்.

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்
காட்டிலே நல்வினைகள் செய்திடிலென் — கூட்டிலவாட்
சாத்தியே நின்றிலையேல் தக்கனா வேள்விசெய்த
மாத்திர மேயாங்கண்டாய் வந்து.

இ-ள். வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென் = முன்பு மருவிப்போந்த தொழில்களையும், புத்திரமித்திர களத்திராதிகளையுங் கைவிட்டுத் துறவறத்திலேபோய் நின்றாலும் பிரயோசனமென் — காட்டிலே நல்வினைகள் செய்திடிலென் = இல்லறத்திலேயிருந்து நன்றான வேள்வியாதி கன்மங்களைச் செய்தாலும் பிரயோசனமென் — கூட்டிலவாட் சாத்தியே நின்றிலையேல் = பொருந்தினதொரு நிலையிலே நின்றாயாகி லுனக்குப் பிராணனான சிவனைக் கூடியவனாகவே யொழியுனனுடைய செயலற நின்றாயில்லையாகில், — தக்கனாவேள்வி செய்தமாத்திரமேயாங் கண்டாய் வந்து = தக்ஷப்பிரஜாபதி தன்னுடைய வகங்காரத்தின் மிகுதியாலே கர்த்தாவை யிகழ்ந்து தன்னாலே செய்யப்பட்டதாகவே நின்று யக்கியத்தைச் செய்தே

றுபிரயோசனமுங் கைகூடாமல் நீங்காத துன்பமே பெற்றாற் போல நீயுங் காத்தானைக் கைவிட்டுன்னுடைய செயலென்றே நின்றுபெருதற்கரிய பேறனையிழந்து போனையாகையா லிப்படிச்செய்யாமலந்தவுண்மையிலே நிற்பாயாக. இது திட்டாந்த பூர்வமாக வறிவித்தது. (௩௯)

இன்னமுமிவன் செயலற்றுநின்று சாதிக்குமுபாயத்தை யுற்றிப்பிறக்கும் வண்ணமருளிச்செய்கிறார்.

சிவனமுதலே யன்றி முதலில்லை யென்றுஞ்
சிவனுடைய தன்னறிவ தென்றுஞ் - சிவனவன
தென்செயல தாகின்ற தென்று மிவையிறந்த
தன்செயலாகக் கொள்ளாமை தான்.

இ - ள். சிவனமுதலேயன்றி முதலில்லையென்றும் = நித்தனுஞ் சுதந்தரனு மெப்பொருட்குந் தாரகமாய்க் கிருத்தியகாரணனுமாய்க் கைவல்லிய நியாகியுமாய் அசைவின்றியே நிற்கிற சிவனாகிற காத்தானை யொழிய வேறு நானென்ன வொருமுதலில்லையென்றும்,— சிவனுடையதென் னறிவதென்றும் = ஆன்மாக்களா யானே யறிந்தேனென்கிற வறிவெல்லா மவனாலொழிந்தறியப்பட்டதாகையால் நீயுமிதனை யவனறிவேயென்றும்,— சிவனவன தென்செயலதாகின்ற தென்றும் = எக்காலமு மான்மாக்களா யானே செய்தேனென்று செய்யத்தக்க செயல்களெல்லா மந்தக் கர்த்தாவின செயலாகையால நீயுமிதனை யந்தக் கர்த்தாவின் செயலேயென்றும்,— இவையிறந்த தன்செயலாக் கொள்ளாமைதான் = இப்படி நிச்சயப்பன சொல்வன செய்வனவான விவற்றை யெப்பொழுதுந் தன்னுடைய செயலாகக் கொள்ளாமல் சகலமுங் கர்த்தாவின் செயலேயென்று யாவர் சிலர் தானறிந்தாராகில் அவர்க ளந்தப்பொருளைத் தானாய் விடுவார்கள். (௪௦)

இனியிந்த வத்தமசைவ சித்தாந்தத்தி லொழிந்து வேறொ
ருசமயங்களினு மில்லையென்றருளிச்செய்கிறார்.

இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுட
னொன்றுசொலி மன்றத்து நின்றவரா - ரின்றிங்கே
யங்கமுயிர் பெறவே பாடு மடியவரா
ரெங்குமில்லை கண்டா யிது.

இ-ள் இன்றிச்சமயத்தி னல்லதுமற் றேழையுடனொன்று
சொலி மன்றத்து நின்றவரார் = இப்பொழுதிந்தச் சைவசித்தாந்
தத்திலொழிந்து இப்படிக்கொத்த பரமஞானத்தையு மருளிச்
செய்து ஞானசத்தியுடனே கர்த்தா திருவம்பலத்திலே யெழுந்
தருளிநின்று ஆனந்த நிருத்தஞ்செய்தருளித் தன்னுடைய மெய்ய
டியார்க்கு எடுத்தருளிய ஸ்ரீபாதமே யிரக்ஷையென்று காட்டிய
கையுடனே மோனத்தாலேமொழிந்து திருக்கண்சாத்தியருளி
யெல்லாருங் காணவேநின்றார் வேறொரு சமயங்களிலுண்டோ;
—இன்றிங்கே யங்கமுயிர்பெறவே பாடுமடியவரார் = இன்றிந்த
லோகத்திலே ஞானமுதமாகிய திருமுலைப்பாலை யமுதுசெய்த
இந்தப்பெருமையாலே நெடுநாளாக வஸ்தியாகக்கிடந்து முன்பு
போலே பிராணனைப்பெற்றுப் பிள்ளையுமாயுள்ள வயதுஞ்சென்று
எழுந்திருக்கும்படி திருவாய்மலர்ந்தருளி இதனைப் பரசமயிகள்
தங்கள்ஞானத்தாலே சித்துக்காட்டினு றென்னுமல் (சித்தர்
சித்துக்காட்டுமது மீண்டு மப்பொழுதே பொய்யாய் விடுமாகை
யால இப்படியன்றியே) யிந்தப்பெண்பிள்ளை நெடுங்காலமிருந்து
முன்னே பிதாவானவன் நாயனாருக்கு வாழ்க்கைப்படுத்தவென்
றபடியாலு ம் அவரிதற்குப் பொருந்தாதபடியாலும் இவர்களும்
வேறொன்றுக்கும் பொருந்தாமல் தவத்திலேநின்று பின்பெல்
லாருங்காணவே திருப்பெருமணத்திலே கூடப்புகுந்திட்ட இப்ப
டியிருந்தின விந்தச்சமயத்தில சம்பந்தப்பெருமா னையனொழி

க்து வேறுமொரு சமயங்களிலுண்டோ,— எங்குமிலைக் கண்டா யிது = இந்தமுறைமைகளிந்தச் சமயத்திலொழிந்து மாணவக னே? வேறொரு சமயங்களினு மில்லைகாண்,

இனியிந்தச் சைவசித்தாந்தத்தி லுறுதிப்பாட்டிலே நின்ற சிவஞானிகள் பெருமையை யருளிச்செய்கிறார்.

விரிந்தன குவிந்தன விழுங்குவார்கண் மீண்டுந்
தெரிந்தன தெரியாது நிற்பர் - தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழைபா லென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

இ-ள், விரிந்தன குவிந்தன விழுங்குவர்கள் = இந்தச் சிவ ரூபந் தன்னிடத்தி னிற்கிறபோல வெவ்விடத்து நிற்கிற முறைமையைக்கண்டு பேரின்பத்தை யெய்தியு மிதிலுறுதலாலே தன்னையும் பிரபஞ்சத்தையு மந்தப்பொருள் தன்னையுமறந்து சுபாவத்திலேயழுந்தி யநுபவித்துஞ்செய்யாநிற்பார்கள்,—மீண்டுந் தெரிந்தன தெரியாதுநிற்பர் = இந்த முறைமைகளிலே யநுபவியாநிற்கச்செய்தேயும் பிராரத்தத்தாலே பிரபஞ்சந் தோன்றினுஞ் சொரூபத்தி லைக்கியத்தாலே பிரபஞ்சநீதியறியாமலத்தவுண்மையைக்கண்டு நில்லாநிற்பார்கள்,—தெரிந்துந் தெரியாது நிற்கின்ற சேயிழைபாலென்றும் பிரியாதுநின்றவனைப்பெற்று = அநாதியே சாவத்தையுமழிந்து மறிவிக்கு நடத்தாநிற்கச் செய்தேயுந் தானொரு விகாரங்களினும் படாமல் நிற்கிற ஞானசத்தியுடனே யெக்காலமும்விட்டு நீங்காத சிவனைத் தங்களிடத்திலறுதியாகப்பெற்ற சிவஞானிகள். இதுசிவஞானிகளுக்கு கொடுக்கத்திலும் விரிவிலும் இருவிலு மிந்தவுண்மையே யொழியப் பிரபஞ்சவாதனை கூடாதென்றறிவித்தது (௫௫)

இன்னமுமொரு திருவெண்பாவாலே யிதனை விளங்கவருளிச்செய்கிறார்

ஆதனமூ மாதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனைக் கொண்டே தெளிவுற்றுச்-சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்ப
ரேதமறக் கண்டவர்க ளின்று.

இ - ள். ஆதன—இன்று = ஆன்மாக்களுக்கு இருப்பிடமான தத்துவங்களையு மிவையிடமாக நிற்கிற ஆன்மாக்களையு மநாதியே பொருந்தி யவையவா யல்லவுமாய் நிற்கிற சைதன்னிய சொரூபனான சிவனை யவன் காருண்ணியத்தினாலே ஞானமே திருமேனியாகக் கொண்டெழுந்தருளி வந்த வாசாரியனைக்கொண்டே தெளிந்து தானுமந்தச் சைதன்னிய சொரூபனாய் நிற்கிற தன்னையு மந்தச் சைதன்னியமானது களையும்படி யந்தச் சிவன் கையிலேகொடுத்து ஞானத்துக்கு மேலாகிய வந்தச்சிவமாகியே யிராநிற்பார்கள் திரோதாயிநீங்கத் தரிசித்த கலியாணர்கள். ()

இப்படி நிற்கத்தக்க சிவஞானிகளிடத்திலுண்டான விசேஷங்க ளருளிச்செய்கிறார்,

தாமடங்க விந்தத் தலமடங்குந் தாபதர்க
டாமுணரி லிந்தத் தலமுணரும் - தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லா ளயர்ந்து.

இ-ள். தாமடங்க விந்தத்தலமடங்குந் தாபதர்கடாமுணரி லிந்தத் தலமுணரும் = இப்படி ஞானத்திலேநின்று சாதித்தவர்க ளந்தச் சிவனைப்பெற்று சிவனிடத்திலே யொடுங்கவே ஞானமு மொக்கவொடுங்கா நிற்கும்,—இப்படிக்கொத்த சிவஞானிகள் பிராரத்தத்தாலே நிலைதிரிந்தாலு முன்பொடுங்கின ஞானமு மொக்கவுணர்ந்து முன்பு மாயை சீவித்தாற்போல விப்பொழு

துமிந்த ஞானமே யவனுக்குத் தனுகரண புவனபோகமுமாய் நிற்கும்,—தாமுனியிற் பூமடந்தைதங்காள் புகழ் மடந்தைபோ யகலு நாமடந்தைதில்லா ளையந்து = இப்படிப்பட்ட சிவஞா னிகளுக்குக் கோபப்பிரியங்க ளில்லையாயினு மிகுந்த பாவிக ளால் அவர்கள் திரிவுளங் கரிந்தகாலத்து அந்தப் பாவிகளுக்கு ண்டான ஐஸ்வரியமும்போ யவர்கள் கீர்த்தியும் விட்டுப்போ யவர்கள் வாக்குக்குந் தம்பியாநிற்கும். சிவனைக்கூடி நின்ற சிவஞானிகளுக்கும் பிராரத்தத்தாலே நிலைகிரிந்தாலும் விசுவங் கூடாமல் ஞானங்கூடின காரணமேதெனனில்? ஞானத்திலே நின்றவன் விழுந்தா லதற்குக்கீழான பிரபஞ்சத்திலே விழாநிற் பன, ஞேயத்திலேயழுந்தினவனுக்கு நிலைகிரிந்தா லதற்குக்கீ ழான ஞானத்திலேவிழுவன, இதனையொழிந்து விசுவங்கூடா தெனவறிக. (சுஅ)

இப்படிச் சிவனைப்பெற்றவர்கள் மூத்தராய வினைதொழி ந்து ஒன்றையாக்குத லழிக்குதல் செய்கிறவிதாலவரனிருத் தியமாயிருக்க விவர்களுக்குண்டானபடி யெப்படியென்ற மாணு க்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
மாக்கியிடு மன்பாக்கவன

இ-ள். துரியங்கடந்த சுடர்த்தோகையுடனென்றும் பிரி யாதே நிற்கின்ற பெம்மான் = ஆன்மபோதத்தா லறிதற்கரிய ஞானசத்தியுடனே யெக்காலமும் விட்டு நீங்காமனிற்கிற பர மேஸ்வரனானவன்,— துரியத்தைச் சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளுமாக்கியிடு மன்பாக்கவன = தன்னு டையவனாவிலே மிகுக்க வனைபவைக்க வானமாக்களையானம

போதங்கூடாமல் விழிப்பித்த ஞானசத்தியிலேகூட்டித் தன்னு லேசெய்யப்பட்ட வநுக்கிரக நிக்கிரகங்களையு மவர்களைக்கொண்டு தான் கூடிநின்று செய்வித்து அவர்கள் செய்தார்களென்படியே நிறுத்தாநிற்பார்கள். (௬௯)

இப்படிப்பட்ட சிவஞானிகளருளாலே செய்த சாமர்த்தி யங்களை நாலுசெய்யுளாலே யருளிச்செய்கிறார்

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்த - லேடெதிரெ
ன்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா னேழுலகுபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்

கொலகரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்த - னல்ல
மருவார் மறைக்காட்டில் வாசற் றிறப்பித்த
திருவாமூ ராளி செயல்

மோக மறுத்திடினு முத்தி கொடுப்பதென்னு
வாகமங்கள் சொன்ன வவரதமைத்த - சேதாகையாபாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை
யேதாக்கச் சொல்லேவ னியான.

பாயப்பரியொன் றந்தப் பரமானந்தத் தப்பரனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

இ - ள். இப்படி நாயன்மார்செய்த செயற்பாடுகளையு மறி வாயாக. (௭௯)

இப்படிப்பட்ட சிவயோகமே முத்தியைத் தருவதென்றும் மற்றயோகங்களெல்லாம் சனனத்தை விளைக்குமென்று மருளிச் செய்கிறார்.

அம்மையிலு மிம்மையிலு மச்சந் தவிர்த்தடியா
ரம்மையுமா மெங்கு மியங்குதலான - மெய்ம்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோக
மவயோக மென்றே யறி.

இ - ள் அம்மை—யறி=தம்பிரானார் திருவடியைப்பெற்ற சிவயோகிகள் பதமுத்திகளாலுண்டான பயங்களையும் பிராரத்தத்தாலே யிந்தலோகத்திலுண்டான பயங்களையுஞ் சொரூபத்தி னைக்கியத்தாலேகெடுத்து அந்தச் சொரூபத்துக்குள்ளளவும் வியாத்தரா யொருசங்கற்ப விகற்பமின்றியே யெவ்விடத்துந் தங்கள் சுவெச்சையிலே திரிகையால் மாணவகனே ? இப்படிச் சற்காரியமான சிவயோகமே சிவனையுள்ளபடியறிந்து கூடின யோகமாவது. மற்றுமுள்ள யோகமெல்லாஞ் சிவனையுள்ளபடி யறியாத யோகமாகையா லவையெல்லாஞ் சனனத்தையுண்டாக்குமென்றே யறிவாயாக. (௭௬)

ஆன்மாக்க ளெல்லார்க்குங் கர்த்தா வொருவனாயிருக்கச் சிலரைப் பதமுத்திகளிலே வைத்துஞ் சிலரைத் திருவடியிலே சேர்த்துக்கொண்டுஞ் சிலரை விஸ்வத்திலேநிறுத்தியுஞ் செய்தாற் பக்ஷவாதியாகானோ வவனுடையகிருபைக்குப் போதமேது வென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

மன்னரு ளெவ்வண்ண மானுடாபான மாணவக
வன்ன வகைய தானாலும் - மென்னி
லடியவரே யெல்லாரு மாங்கவர்தா மொப்பி
லடியவரே யெல்லா மறி.

இ - ள். மன—அறி = மாணவகனே ! இராஜாவானவன் தன்னுடைய வாக்கினையிறுலே தனக்கு நடக்கு மகதராசியங்களில பிராணிகளெல்லாரையு மிரக்ஷிக்கவேணுமெனகிற கருத்தெப்பொழுது முண்டாயிருக்கச் செய்தேயும புத்திமானகளுமாயச் சாஸ்தருமாயத் தன்னுடையவளவிலே மிகுந்தசிநேகங்களை யுடையவருமா யிருக்கத்தக்கவாகளைத் தாறுக்ப பாரத்துக் தன்னுடைய வளவிலே சிநேகமின்றியே காரியத்தைப்பெற்ற வாக்கினைக்குப பயந்திருக்கத்தக்கவாகளை யொவவொரு முகங்களிலேவைத்தும், குணஹீனரா யிருக்கத்தக்கவாகளை யவாகளுக்குத்தக்க தணடஙகளிலே தணடித்து அவாகள் குணவான்களாகும்படி செயகிற விசையெல்லாங் கிருபையாலேயாறுற்போலப, பரமேஸவரருடைய திருவுளமெல்லா மளவிலுமொத்தவனபாயிருப்பினு மலபாகமுணடாமளவும் ஆனமாக்களுக்குத் தனுகரணபுவனபோகஙகளையுங் கனமபலஙகளையுங்கூடடிச சுகதுக்க வேதனைகளிலேவைத்துச சிலரைச சததிநிபாதத்துக் குறைதலைக்கிடாகப பதமுததிகளிலேவைத்து, மிகுதத சத்திநிபாத முடையவாகளைத திருவடியிலே சேர்த்துக்கொணடு முறைமையிலே சேர்த்தருளாநிறபனென்று சொலலுகையா லெல்லாருமவருக்கழ மையா யிருக்கச்செயதேயுந திருவடியைப் பெற்றவடியா ரொபபிலலாத வடியாராகையால நீயுமிவையெல்லாவற்றையுமறிந்து திருவடியிலே யொருந்தியிருக்கிற சிவயோகமே சநதத்தை யறுக்கிறயோகமென்று மிதிலே நிலைநின்றுபசிப்பாயாக. (௬௫)

இப்படி யொப்பிலலாத வடியாாக்குந் தேகமுள்ளளவும் பிராரத்தம புசிக்கவேணடுகையில பிராரத்தம புசிக்கச்செய்தே யாகாமியமேறுமற் புசித்தபடி யெவவெனனற மாணாக்கனை நோக்கி யருளிசசெயகிறூா.

உடம்புடைய யோகிகடா முற்றுசிற் றின்பம்
மடங்கத்தம் பேரின்பத் தாக்கிற - றொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
யிளைப்பதுமொன் றில்லை யிவர்

இ-ள். உடம்புடைய யோகிகடா முற்றுசிற் றின்பமடங் கத்தம் பேரின்பத் தாக்கில = பிராரத்தநாசம் பிறக்குமளவு முடம்பிருக்கத்தக்க இவ்யோகிகள் தாம் சிற்றின்பத்தைப் பொருந்தினார்களாயினு மந்தச் சிற்றின்பமானது நிலையில்லை யேறு பாடும் பாவனையில்லை வேறுபாடுமொழியப் பேரின்பத்திலே வேறு பாடில்லையாகையா லிவர்களுக்கிந்த விரண்டுவேறுபாடுமின்றிச் சொரூபத்திலே நிலைத்திருந்தாலும் ஞானத்திலொழிந்து மலமா யாதி கன்மங்களிற்படார்கள். ஆதலாலே, கூடின சிற்றின்பங் களெல்லாம் ஞானத்திநிலையாலே மீண்டு மந்தப்பேரின்பத் திலே யாக்கிக்கொள்ளாநிற்பார்கள். இப்படிச் செய்யு மிவர் களுக்கு — தொடங்கி முளைப்பது மொன்றில்லை முடிவது மொன்றில்லை யிளைப்பது மொன்றில்லை யிவர் = பிராரத்தம் புசிக்கச்செய்தேயு மறுமைக்கு வித்தான வாகாமியமங்குரிப்பது மொன்றில்லை பிராரத்தநாசம் பிறந்து தேகமானது நழுவுங் காலத்து இவ்வுடம்புடன்கூடி மரிப்பதுமில்லை, ஆகையா லிவர்களொரு கண்டங்களாலு மொருசற்றுஞ் சலியார்கள். ( )

ஞானத்தாலே சொரூபத்தைக் கூடவேணுமாகில் வந்த ஞானந்தானே யமையாதோ சொரூபமென்று ஒருபொருள்கூட வேணுமோவென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

பேரின்ப மான பிரமக் கிழத்தியுட
னோரின்பத் துள்ளானை யுள்ளபடி - பேரின்பங்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த வின்னமுத
முண்டவரே யுண்டார் சுவை.

இ-ள் பேரின்பமான பிரமசத்தியுட னேரின்பத் துள்ளனையுள்ளபடி பேரின்பங்கண்டவரே கண்டார் = அவ விட்டுப்படாத பரமானந்தமான பிரமசத்தியுடனே யிடைவிடாத சுகரூபனுயிருக்கிற பரமேஸ்வரனை முறைமையிலேகூடியந்தப் பரமானந்தமே யநுபவிக்கிற சிவயோகிகளே சிவனை யுள்ளபடி யறிவார்கள்,—கடலுயிர்த்த வின்னமுதமுண்டவரே யுண்டார் சுவை = கடலிற்பிறந்த வினியவமுதத்தைப் புசித்து அதினு டையான் விரத்தி லமுதத்தினவர்களே யமுதத்தைப் புசித்தவர்க ளு மதிரப்பிரயோசனமான நித்தியத்துவம் பெற்றவர்களுமல் லது, அந்த வமுதத்தைத் தரிசித்தமாத்திரத்தி லதினுடைய விருதமுந்தெரியாது பேறுங்கூடாது அதுபோல், மலமாயாதி களமங்களை நீங்கி ஞானத்தைத் தரிசித்தாலும் சிவனைக்கூடிப் பரமானந்தத்தை யநுபவித்தாலொழிந்து ஞானமறிந்த மாத்திர த்திலஞ்சாயுச்சியங்கூடாது. (௭௭)

இப்படிச் சுகரூபமாயிருக்கிற பரமேஸ்வரன் நானாவிதமா யிருக்கிற பிரபஞ்சத்துக்குக் கர்த்தாவாகி லவனும் விகாரியாகா னென்றமாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்

நங்கையினு னுமனைத்துஞ் செய்தாற்போ னுடனைத்து
நங்கையினுற செய்தளிக்கு நாயகனும் - நங்கையினும்
மெய்யாயத் தானமே நாட்டப் பெறுமித்துக்
ணைமப்பெருமா னுாத மியல்பு

இ-ள் நங்கை—இயல்பு = நம்முடைய நினைவினவசத் திலேநின்று கைகள் முதலான வங்கங்களெல்லாந் தொழில்களை யுஞ் செய்துமுடியாநிற்க வந்தச் செயற்பாடுகளெல்லா நம் முடையமேல் யேறுமாப்போலச் சுகரூபியாயிருக்கிற சிவன் சாக்ஷிமாத்திரமாயிருக்கத் தன்னுடைய சத்தியாலே பிரபஞ்ச நடத்துநிற்க விந்தச்சத்தியினு நிர்விகாரமாயிருக்கிற சிவன்

தானொன்றைச் செய்யாதிருக்கச் செய்தேயு மிந்த சத்திக்குப் பிரானுமாய நாயகனுமாகையாலே யிந்தசசிவனையே கர்த்தாவாகச் சொல்லப்படுதலால் மாணவகனே? இவவளவேகாணெம முடைய கர்த்தாவுக்குச செயலாயுள்ளது (எஅ)

இப்படி வெகுவிதமான சத்தியிலே நிர்விகாரமான சிவன் பொருந்தினபடி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ
லந்நிற மண்ணு மமயினையுந் - தெந்நிறத்த
தெந்நிறத்த னாயிருப்ப னெங்கள் சிவபதியு
மந்நிறத்த னாயிருப்ப னாங்கு

இ - ள் பொன — ஆங்கு=பொன்னுக்கு நிறமானமாற்றானது கட்டியானபோது மாபரணங்களானபோது மாறுதலுக்கு வேறுபாடில்லாதாற்போலச சுகரூபனான சிவனும ஞானசொரூபியான சத்தியுமிந்த முறைமையேயாதலால பிரபஞ்சநிமித்தமாகச் சத்தியானது யாதொருரூபமா யிருந்தது நமமுடைய கர்த்தாவாகிய சிவனு மந்தவிடங்களதோறு மந்தந்த முறைமைக் காயே யிராநிற்பன, (எகூ)

இன்னமுஞ் சிவனுடைய நிலைமையை விளங்க வருளிச செய்கிறார்.

தாரத்தோ டொன்றுவா தாரத்தோர் கூறுவா
தாரத்தோ டெங்குந் தலைநிற்பா - தாரத்தி
னுதாரத்த தேயிருப்பா ரற்றானத தேயிருப்பார்
வேதாந்தத் தேயிருப்பா ரேறு

இ - ள் தாரத்தோ டொன்றுவா = சிருட்டிகாலத்திலே யான்மாக்கள் குக்குமதேகத்துடனே யிச்சா ஞானகிரியை சிவிகல்பபொருட்டாகச சிவனும் தமமுடைய சத்தியைத்

தோற்றுவித்தித் தாமு மந்தசசத்தியுடனேகூடி யிச்சாஞானக் கிரியாசொரூபமாவா—தாரத்தோா கூமுவா = அவாகளுக்குத் தாலதேகமாய வருபபுண்ணவேணடித் தாமுஞ் சத்தியுமாக அாந்த நாரீசசுரமான விககிரகமாகாநிறபா,—தாரததோடெங் குந தலைநிறபா — அநத வானமாககளுககு மலபாக முணடா கைபபொருட்டு அவாகள கனமஙகளிலே யநுபவிககவும ஆாஜ ஜிக்கவுமவேணடி சததியுருவமான பிரமவிஷ்ணு உருத்திரா, மஹேஸவரா சதாசிவரெனறு சொலலபபடட விககிரகஙக ளுடனே யநதரமூாததியான பிரணவசொரூபமாய ஆனமகக ளிடங்களிலே மாயாததததுவஙகளுடனேகூடி நடததாநிறபா,— தாரதசிறுதாநததேயிருபபா = மீணடு மானமககளையுந் தசதது வஙகளையும பிரிககவேணடி மஹாமாயாசததியான நாதாநத மானு நிருவிகாரநதிலேயிராநிறபா,—நாறமுணதேயிருபபா = இவையெனறையுமறியாம லுபாதானஙகளிலே மறைபபட வேணடி நாலாநதானமான திரோதானசததியிலேயிராநிறபா,— வேதாநததேயிருபபா = இபபடிககு அநுககிரகமே செய்ய வேண்டி வேததநதிலே முடிநதபொருளான பராசததியிலே யிரா நிறபா,—வேறு = இபபடி யெலலாமாய நிறகசெயதேயு மிவறறுககுத் தானவேறுமாய தனனுடைய சுபாவமான சொரூ பமா யிராநிறபா. (அ௰)

இபபடி பரமேஸவர னெலலாமாயலலவுமாய நிறகிற முறைமையைப பேதமெனனவோ வபேதமெனனவோ பேதா பேதமெனனவோ வெனற மாணுககனைநோககி யருளிச்செய் கிறா.

ஒன்றுமாகத தொன்றுமாயச் சாத்திரஙகளொனறுக நினறுமாதது நிச்சயிக்க மாட்டாவா - வினறுமாக வெனறு வியமபிடுமோ வெனபோலவா ரேதேதுஞ் சொனனறுறு னேறுமோ சொல.

இ-ள். ஒன்று—சொல = வெகுவிதமாயுள்ள சாத்திரங்களெல்லாமொரு சற்றுந்தரித்துநின்றவனுடைய வுண்மையையறுதியிட்டுச் சொல்லமாட்டா. இப்படிப்பட்ட தொன்றையிப்பொழு தறுதியிட்டுச்சொல்ல வென்னாலே முடியுமோ, வென்னையொப்பார் சிலர் சொன்னாலும் விசுவசத்தினுள்ளாராக கேற்குமோசொல்லாய் இன்னமுமிவனுக்கிந்தமுறைமை விளங்கிறதில்லையென்று கொண்டு இப்படி யருளிச்செய்ததெனக் கொள்க. (௬௧)

இதனை யின்னமிவனறியும்படி யருளிச்செய்கிறார்

யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திறமு
மாதேயும் பாக னிலச்சினையே - யாதலினாற்
பேதமே செய்வா ரபேதமே செய்திடுவார்
பேதாபே தஞ்செய்வார் பின்

இ-ள் யாதேனும—பின = யாதொருகாரணத்தினாலுஞ் சர்வலோகங்களெல்லாப்பொருள்களுஞ் சந்நிதியைப்பொருந்தின சிவனுடைய வடையாளமேயாகையால் நீயுமிதனைப் பேதமென்பாய அபேதமென்பாய பேதாபேதமென்பா யிவற்றிற் பொருந்தினதொன்றைச் சொல்வாயாக பின்னென்றது ஞாதாக்களுக்கு இந்த மூன்று காரியமுங் கருத்தல்லவென்றது. அடையாளமென்றது சர்வமுஞ் சைதன்னியமாக நின்றவர்கட்கன்றி நின்றிராக்ஷிக்கையாலென்வறிக, (௬௨)

இந்தமுறைமையைத்தந்திலழுந்தினவனுக்கொழிந்து கேட்டவனுக்கு விளங்காதென்று இன்னமுமிதனை விளங்க வருளிச் செய்கிறார்.

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுண்ணின் றாடன் மகிழ்ந்தானுஞ் - சென்றுடனே
யெண்ணுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றுமே
பெண்ணாணின் றெம்பிரான்.

இ - ள் நின்ற—பிரானென்று சொல்லுகிறபேதமும் அபேதமும் பேதாபேதமுமென்று சங்காரகாலத்திலே சத்தியையுமொடுக்கிக்கொண்டு சங்காரத்தாண்டவஞ் செய்தருளின தம்பிரானே சிருஷ்டிகாலத்திலே தோற்றுவிக்கத்தக்க பொருள்களுடனே பொருந்திய பஞ்சபூதங்களுஞ் சந்திராதித்தரு மானமாக்களு மாய் நின்றும், திதிகாலத்திலே யடியார்பிறவித்துயரங் கெடத்திருச்சிற்றம்பலத்தி லானந்தநிருத்தத்தை விரும்பினனுமாகையா லாதியே தன்னுடைய சொரூபந்தோன்றும் வண்ணமாவாய் நின்ற முறைமைபோல வானபோதந்தோன்றும்படிச் சிவனே நின்றவாகருக்கொழிந்து சிவனுடைய வுண்மைதெரியாது ( )

இனிச்சொரூபத்திலே பொருந்தனமையாய் நிற்குமுறைமை யருளிச்செய்கிறார்.

சிவமே சிவமாக யானினைந்தார் போலச்
சிவமாகி யேயிருப்பர் தம்மிற் - சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி

இ - ள் சிவமே சிவமாக யானினைந்தார்போலச் சிவமாகியே யிருப்பர்தம்மிற் = பேதமும்பேதமும் பேதாபேதமு மறப் பக்குவத் திறப்பிரகாசித்தசிவசொரூபமேசொரூபமாக வேறொரு விகற்பமுங்கூடாமல் நானநுபவித்தபடியே யுன்னையும் நினைந்து நின்றார்போல மாணவகனே நீயுமொருவிகற்பங்கள் கூடாம லந்தச்சொரூபமே சொரூபமாகவிருப்பதொழிந்து,—சிவமென் றுணர்வாருமங்கே வுணர்வழியச்சென்று வுணர்வாருமுண்டோ புவி = தானுந்தனியே யொருமுதலென்றும் சிவனுந் தனித்தொருமுதலென்றுந் தன்னுடையபோதத்தாலே யிந்தச்சிவனை யறியவிசாரிப்பாரு மவ்விட்டதேதானகெட்டுச் சிவத்துடனே பொருந்த விசாரிப்பாருமுண்டோ வுலகங்களில். (அச)

இன்ன மிதனை விளங்க வருளிச்செய்கின்றார்.

அதுவிது வென்று மலன்றே யென்று
மதுநீயே யாகின்றா யென்று - மதுவானே
னென்றுந் தனைமையுணர்ந்தா ரெல்லாமி ரண்டாக
வொன்றுக்குச் சொல்லுவரோ வுற்று

இ-ள் அது—உற்று = ஆன்மாவும் சிவமு மெப்பொழுது மிரண்டாயிருக்குமென்றும், சிவமென்றொருமுதலில்லை யான்மாதானே சிவமென்றும், சிவம் நீயென்றும் வேறில்லை யுன்னுடைய வுபாதிகள் நீங்கினபொழுதே நீதானே சிவமாகின்றாயென்றும் நான் சிவனுடனேகூடிச் சிவனைய விட்டேனென்றும் தன்மையுள்ளபடி யறிந்திருக்கிற சிவயோகிகளிப்படியே பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் சொல்லுவார்களோ மாணவகனே. (அ௫)

இனி காத்தாவெல்லாமாய்நிற்கிற சுபாவத்தை விளங்க வருளிச்செய்கிறார்

ஈறுகி யங்கே முதலொன்றா யீங்கிரண்டாய்
மாறாத வெவ்வகையாய மற்றிவற்றின் - வேறாய்
யுடனா யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண்

இ-ள் ஈறங்கே முதலொன்றாய = சர்வசங்காரஞ்செய்த விடத்துச் சிவமொன்றுமேயாய,—ஈங்கிரண்டாய = மீண்டும் சிருஷ்டிகாலத்திலே சத்தியைத்தோற்றுவித்து மச்சத்தியுந் தானுமாய,—மாறாதவெவ்வகையாய = சர்வத்தையு மந்தச் சத்தியிடமாய்நின்று தோற்றுவித்து அச்சத்தியு மவையுங் கூடிநின்று நடக்கும்படி யொழிவற்ற வட்டமூர்த்தியுமாய,— மற்றிவற்றின்வேறாய = இப்படி யிவற்றிற்பொருந்தி நிற்கச்

செய்தேயு மியற்றுகளுந் தான்வேறுமாய் — உடனுயிருக்கு முரு வுடைமை = இப்படி வேறாய்நிற்கச்செய்தேயு மொருமுதல் போல வினைதானேயாய் நிற்கிறவுண்மை,— என்றுங் கடனு யிருக்கின்றனகாண் = மாணவகனே ? எப்பொழுது மவ னுடையனு யிருக்கின்றனகாண் இது பேதமென்பார்க்கு மபேதமென்பார்க்கும் பேதாபேதமென்பார்க்கு மிவையொன்று மல்லவென்பார்க்கும் பொருந்திநிற்ப தென்னுமுறைமை யறி வித்தது (௬௬)

சிவனுக்குச் சாவமூன்று திருமேனியாகி யுடனுறைவ தெல்லா முயிருக்கேயென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்

உன்னுதரத் தேகிடந்த கீட முறுவதெல்லா
முன்னுடைய தென்னுநீ யுற்றனையோ - மன்னுயிர்க
ளவ்வகையே காணி னழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால்

இ - ள் உன — பால = மாணவகனே ? உன்னுடையவுதரத் திலே நானாவிதமாய்க்கிடக்கிற ஜந்துக்கள் வினைக்கீடாக அவை படுகிற சுகதுக்கவேதனைகளெல்லா முனக்குள்ளவினைபோல நீ கூடிநின் றநுபவித்ததுண்டோ ? ஆகையால், சாதத்தையுங்கூடி நிற்கச்செய்தேயு மவையொன்றுடனும் பற்றற்றுநின்று பிரகாசிக் கிற சிவனிடத்திலே யவனருளாலே நிலைபெற்றுநிற்கிற வான் மாக்க ளாகையுமழிகையுமாய் வருகிறவுண்மை யந்தமுறைமை போலக்காண் இது சுகதுக்கவேதனைக ளான்மாவுக்கொழிந்து சிவனுக்கில்லையென்னுமுறைமை யறிவித்தது. (௬௭)

சிவன் சுகதுக்கவேதனைகள்கூடாமல் நிற்கச்செய்தே சாவமூன்றானுக் நிற்கிறசாமாத்திய மருளிச்செய்கிறார்.

அவனே யவனி முதலாயி னானு
மவனே யறிவாய நின்றானு - மவனேகா
ணா ண்றிப பெண்ணா யலியாகி நின்றானுங
காணாமை நின்றானுங கண்டு

இ-ள் அவனே—கண்டு = மாணவகனே? பிருதிவி முதல நாதமீறான தத்துவங்கள் சேட்டிக்கும்படி யந்தத் தத்துவங்களுக்குத் தத்துவனாய்நின்றானு மந்தப்பரமேசுரனே, யிந்தத் தத்துவங்களைப்பொருந்தி யான்மாக்கள் கன்மபலத்தைப் புசிக்கும்படி யந்தவான்மாக்களுக்கு ஆன்மாவாயினின்றானு மந்தப் பரமேசுரனே, தோற்றப்பட்ட பூதகாரியங்களா னமாக்கள் செய்த வினைக்கீடாக பெண்ணாணலியென்னும் வகுப்புண்டு வடிவாம்படியவற்றை வகுப்பித்து இந்தக்குப்பைக்கு உருப்பாய நின்றானு மந்தப் பரமேசுரனே, இவற்றை யிப்படியறிந்துகூடி யிவை தானாய்நின்று நடத்தச்செய்தேயு மிந்த முறைமைக ளொன்றுமறியாதபடி இரோபவித்து தொருபணியறநின்றானு மந்தப் பரமேசுரனே (அஅ)

இப்படிப்பட்ட பரமேசுவரனை யிந்தத்திருஷ்டியாலே காணவொண்ணாதோவென்றன்பு மிகுதியாலேகேட்ட மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

இன்றுதா னீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
வன்றித்தா னுன்னைக் கண்டேனோ - வென்று
லருமாயை யீன்றவுடன் பங்கனையார் காண்பார்
பெருமையைச் சூழல பிழைத்து.

இ-ள் இன்று—பிழைத்து = இப்பொழுது நீயென்னைக் கண்டு மிவையெல்லா மறியச்செய்தேயு மென்னுடையசொரூபத்தை யுன்னுடைய மாங்கிஷ திருஷ்டியாலேகண்டாயோ வல்லது மிவற்றையெல்லா மறிந்தறிவிக்கிற நாந்தா னுன்னுடைய

சொரூபத்தை யிந்தத் திருஷ்டியாலே கண்டேனென்றால் யாவற்குந்தெரியாத மாயையைப்பெற்ற சத்தியைப் பாதியிலே யுடையபரமேசுரனை மாம்ஸதிருஷ்டியாலே காணவல்லார் யாவர், விடப்படாத மாயையாலே மறைக்கத்தக்க மறைப்பை யெல்லாந்தப்பி இந்தத் திருஷ்டிகோசரமாகக்கண்டு வழி படவீடுபெறுகைக்கு நம்மைப்போலெழுந்தருளி வந்தனுக்கிர கித்த வாசாரியமூர்த்தியையொழிந்து வேறொருதெய்வமில்லை யென்றறிவித்தது (அகூ)

இப்படி கடாக்ஷித்த ஞானகுருவின் பெருமையை யருளிச் செய்கிறார்

கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்று கடலளக்க வாராதாற் போலப் - படியி லருத்தி செய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லா கருத்துக்குச் சேயனாய்க் காண.

இ - ள் கடலலை—காண = மாணவகனே ?, கடலின்கண் ணெய்தி நின்றுகொண்டு அலைகளையலைத்து நின்று நிறந்து வலஞ்சாமர்த்திய வானகளுக்குங் கடலினுடையவாழமு மகலமு நீளமுமறிய வாராதுபோலச் பூமியின்கண்ணே சரியைகிரியையோகங்களி லே திரவருடடித்த பத்திமான்களுக்குஞ் சிவனுடைய ரூப சொரூப சுபாவங்களை யறியவிசாரிக்கு லவர்கள்கருத்துக்கு மெட்டாதாகையாலே நம்மைப்போலத் தம்பிரான திருமேனி கொண்டெழுந்தருளிவந்து ஞானதீக்ஷ க்கிரமங்களினாலே மலங்களையபோக்கி யவர்களை யடிமைகொண்டது. (கூ)

ஆகையால் நம்முடையபொருட்டாகத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்த வாசாரியனே யருளுரு சிவமுமென றருளிச்செய்கிறார்,

சிவனெனவே தேறினனயா னெனறமையா லின்றுஞ்
சிவனவனி லந்தபடி செப்பி - லவனிதனி
லுப்பெனவே கூடாமை யுருச் செய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன்.

இ - ள் சிவன—அவன = சிவனெனயானும் தேறினன்
காணக என்று திருவாதவூர நாயனாருளிச்செயத பிரமாணப
படி நமமை யிரக்ஷிக்குங்காரணத்தா லிப்பொழுதும் பரமேஸ
பரன நமமைப்போ லெழுந்தருளிவந்த முறைமைசொல்லி
லுலகத்தி லுவரிதமான கூடாமை யுப்பாகவே வடிவங்கொண்ட
தெல்லாங் கண்ணையா லப்படியேகாண மாணவகனே யரு
ளாலே சிவன திருமேனிகொண்ட முறைமை (௬௧)

இன்னமு மிவனசந்தேகந்தீராததுகண்டு ஆசாரியனு ஞான
மாககளி லொருவனலலாவானபடியைத திட்டாந்தபூர்வமாக
வருளிசசெயகிறா.

அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல
தெவனவனா நிறகின்ற தேழா - யவனிதனிற
ரோன்றும்மாப புல்லூரி தொல்லுலகி லம்மாமா
யினறிப்போ சொலலா யிது

இ - ள் அவன—யிது = வாககுமனதித கோசரமாயுள்ள
சாவேஸவரன ஆனமாககளைபபோல தேகியாயததோனறின
விது சகலரிறபககுவரான ஆனமாககளுக கவாகளுடைய சத
திநிபாததுக்கீடான சங்காரஙகளாலே யவாகளுடைய மலமா
யாதி கனமஙகளைபபோககித தனககுடைமையான பரமானந்தத
தையளிககைககாக தனனுடையவருளாலே திருமேனிகொண
டெழுந்தருளிவந்ததொழிந்து எபபடிபபட்டவ னெப்படியாய
நிற்பானென்றுசொன்ன யறிவிலலாதவனே , அதெதன்போல
வெனனில, பூமியின கணணே தோனறினமரமானது பயன

படுங்காலங்களிலே கைம்மாறுகருதாமல் சிரத்தையுள்ளவர்களுக்குப் பலன்களைக்கொடுத்துச் சந்துஷ்டிபிறப் பியாநிற்கும், இஃதொழிந்து இந்த மரந்தாரகமாய்நிற்கிற புல்லூரிமரத்தின் பலத்தைக்கொடுக்கவற்றே மாணவகனே சொலலாய். இதனை=இது திருமேனிகொண் டெழுந்தருளிவந்த வாசாரியனைச் சிவனுறென்னத் தெளியவறிவித்தது, (கூஉ)

அருளென்ப தொன்றுவேண்டுமோ சிவமொன்றுமேயமை யாதோவென்ற மாணாக்கனைநோக்கி யந்தச்சிவமு மருளாலொழிந்து மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாதென் றந்தவருளின் பெருமையை யருளிச்செய்கிறார்.

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங் - கத்தியினுன்
மோகக் கொடியறுக்க முத்திப் பழமபழுக்கு
மேகக் கொடியெழுங்கா ணின்று.

இ - ள். முத்தி — இன்று =முத்தியைப்பெறுவதற்குமுதலான வான்மாவென்ப தொருகொடியிலே யநாதியே மறைக்கத்தக்க வாணவமலத்தின்காரியமான வஞ்ஞானமானகொடி வெகுவிதமாகப்படாந்து, இதனாலே யநாதிதமவிளைந்து, இது காரணமாக மயக்கத்தைச்செய்கிறமாயையாலே பூதகாரியமான வுடம்பு சகந்தோறும பலியாநிற்கும், இவை பக்குவப்பட்ட வெல்லைகளிலேயறிந்து தம்பிரானும திருமேனிகொண் டெழுந்தருளிவந்து அருளாலேசமைந்த வசேகதாரைப்பட்டவாளாலே யிந்தவாணவமல்மான மூலத்தைவேறறுக்க, வப்பொழுதெல்லா மலங்களின்முத லடங்கலுஞ்சோரந்துபோய் முத்தியானது வெகுபலமாகப் பலியாநிற்கும், இத்தப்பழக்கத்திலுடைய விராசத்தினாலே சிவமென்று மானமாவென்று மிரண்டல்லதப்படியப்பொழுதேயொரு நீரைமையானசுபாவத்திற் றேன்றுநிற்கும்;

இனி யிந்தவர்த்தத்தைத் தமக்கருளிச்செய்து தம்மை யிரக்ஷித்தவாசாரியனையுந் தீக்கைமுதலாக வவனிரக்ஷித்த முறைமையையுமின்ற வேழுசெய்யுளாலு மருளிச்செய்கிறார்,

அகளத்தி லானந்த தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றோன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்ற
லைமேல் லாக்குவதுஞ் செய்தா னவன்

இ - ள்' அகள—அவன = அடியேனை யீடேற்றுகைப் பொருட்டாகச் சகளீகரமான திருமேனியிலே தன்னுடைய காருணிய சத்தியுடனேதோன்றிக் குற்றமற்ற நிலத்தினுண்டாகிய வானந்தத்தி லானந்தியாய்ச் சமைந்தெழுந்தருளியிருந்தருளியே பிணித்தவிலங்காகிய மலமாயா திகன்மங்களையநேக சங்காரங்களாலே போக்கி யிடுவதுஞ்செய்து, தன்னுடைய பொலிவினையுடைத்தாகிய திருவடியை யென்னுடைய பொல்லாத்தலையிலே வைப்பதுஞ்செய்தான். இது தீக்கைமுறைமை யறிவித்தது. (கூச)

குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்
ணுற்ற தியானத் துடனுறைவா - முற்றவரின [டபோ
மாட்சியுமாய்ப்பிறபரியான மற்றொன்றைக்கண்டிடினக்
காட்சியுமாய நிற்பார் கலந்து.

இ - ள். குற்ற - கலந்து = இப்படித் தமமுடைய வருளா லென்னுடைய மலமாயாதி கன்மங்களைப் போக்கியேயென்னுடைய சுதந்தரத்தையுமறுக்க வடிமைகொண்டெனக் கநாதியே பிரிந்திருக்கிற தமமுடைய திருவடிஞானத்தையும் பிரகாசிப்பித்து, யானென்று மதுவென்றுஞ் சொல்லுகிற வேறுபாட்டையுமறுத்துத் தமமுடையவசத்திலே யாக்கிக்கொண்ட வவ

த்ரங் கூடிக்கொண்ட முறைமையிலே நான் இயாளிப்பானும் நிற்கைக்கு வந்தது இயானமுந் தாமேயாய் நில்லாநிற்பர். இந் தநிலை முதிரவருகிற ஞேயத்தழுந்தலுந் தாமேயாகாநிற்பர். பிராரத்தவத்தாலே நிலைதிரிந்து விசுவந்தோன்றுங் காலத்து மந் தவிசுவந் தோன்றுமல் காணபானுங் காணப்படும் பொருளுந் தாமேயாயிராநிற்பர் இது நிகைக்குப்பின்பு உண்மையிலே நிறுத்தின நிலையறிவித்ததெனக்கொள்க. (கூரு)

ஆளுடையா னெந்தரமு மாளுடையா னேயறியுந்
தாளுடையான் றொண்டா தலைக்காவ - லாளுந்
திருவிசலூ ராளுஞ் சிவயோகி யின்றென்
வருவினையை மாற்றினான் வந்து.

இ - ள். ஆளுடையான = இப்படி யெழுந்தருளிவந்தென்னையரிதாக வடிமைகொள்ளுகையாலே யாளுடையதேவனென்கிற திருநாமத்தையு முடையான,—எந்தரமுமாளுடையானே = என்னைப்போலுந் தனாந்தவடியாரையு மடிமைகொள்ளுவானு மவனே,—அறியுந்தாளுடையான = சாவாணமாககள பொருட்டாகப் பஞ்சகிருத்தியத்தையு நடத்திப்பின்பு பக்குவப்பட்ட வான்மாக்களை யறிந்து இரக்ஷிக்கவல்ல திருவடியுமுடையான,—தொண்டா தலைக்காவல் = உரியவடியாரை மாயப்படைமேலிட்டு வினைசெய்யாது பாதுகாக்கைக்குத் தலைக்காவலாயுள்ளவன,—ஆளுந்திருவிசலூ ராளுஞ்சிவயோகி = எக்காலமுந் திருவிசலூரே திருப்படை வீடாகவுடைய சிவயோகி,—இன்றென வருவினையை மாற்றினான் வந்து = இப்பொழுது தென்னுடைய வருஞானத்தாலே கன்மபலங் காரணமாக மாயையாகிற ஊசலிலே யுழலாநிற்கிற சநந மாணங்களாகிய விசனையையொழித்து அசைவற்றநிலமாகிய திருவடியிலே வைத்தான். இது தம்முடைய வாசாரியன திருநாமமு மவனது மகிமையு மருளிச செய்ததெனக் கொள்க. (கூ௬)

தூலத் தடுத்த பளிங்கின் றுளக்கமெனத்
தூலத்தே நின்று துளங்காமற் - காலத்தாற்
றோன்றித்தந் தெனபிறவித் தாளை யறவிழித்தார்க்
காளன்றி யெனமா றெதற்கு.

இ-ள் தூல—அதற்கு = படிக்கக்கல்லிற் பிரகாசமான தடுத்தவன்னங்களினுடைய ரூபங்களைக்கொண்டு தன்னுடைய சுத்தமான பிரகாசந் தோன்றாமலதுவதுவாய் நின்றாற்போலக் காணுந் தேகத்திலே பொருந்திநின்று, சனன மரணங்களிலே மொத்துண்ணுமல மலபாகமும் கன்மவொப்புஞ் சத்திநிபாதமு முண்டான வுவதாரத்தே யவதிகூடாமலெழுந்தருளிவந்து தம் முடைய பொன்னான திருவடியை யென்தலையினு மிருதயத்தி னும நிற்கும்படி தந்தருளி, எனக கெழுவகையா யெண்பத்து நான்குநூறாயிர யோனிபேதங்களிலுண்டான சனனங்கள் காலற றுப்போம்படி திருக்கண்சாத்தியருளின தம்பிரானார்க்குத் கை ம்மாறுசெய்ய வெண்ணுமளவி லவனவேறொன்றுக்குங் குறை விலனாகையா லென்னை யடிமையாகக் கொடுத்து நான் பாங கெட்டு விடுமதொழிந்து வேறொரு கைம்மாறு கண்டிலேன். இது கைம்மாற்ற வெழுந்தருளிவந் திரக்ஷித்தவ திசயமறிவித் ததெனக்கொள்க. (கூஎ)

இக்கணமே முத்தியினை யெய்திடினு மியானினைந்த
வக்கணமே யானந்தந் தந்திடினும் - நற்கணத்தார்
நாயகற்கு நாயகிக்கு நாளடிமை யெப்பொழுது
மாயிருத்த லன்றியிலே னியான்.

இ-ள் இக்கணமே - யான்.= பெறுதற்கரிய முத்தியினை இப்பொழுது கூடினமாத்திரைக்குள்ளே பெறினும நான கரு தப்பட்ட பரமானந்தம் கருதின கருத்து மாறுவதன முன்னே பெறினு மிவையொன்றையு மாதரிப்பதில்லை, இத்தப்பேற்றை

ய்ளிக்கைப்பேரருட்டு அடியேனுக்காகத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்த சிவயோகிகள் தம்பிரானுக்கு மவருக்கு வாக்கு மனக் காயமாய்நின்ற ஞானசத்திக்கு நானெப்பொழுது மீளா வடிமையா யிருப்பதொழிந்து வேறொன்றுமில்லை. இது பேற்றினதிசயத்தா லடிமை சாதித்ததென வறிக. (௯௮)

என்னை யுடையவன்வந் தென்னுடனா யென்னளவி
லென்னையுந்தன் னாக்கக் கொண்டதலா - லென்னை
யறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று

இ - ள் என்னை - சென்று = எனக்குக் கர்த்தாவாகிய பரமேஸ்வர னென்னுடைய வநாதிமயக்கத்தை நீக்குதல் பொருட்டெனைப்போ லெழுந்தருளிவந் தனக்குள்ளே பொருந்தி நிற்பேனென்று மென்னைத்தெளிய வறிவிக்குமளவி லந்தக்கருணையாலே நானு மப்பொழுதே தம்முடைய வசமாயென்னையு மப்பொழுதே தாமவிரும்பின வடிமையாகக் கொள்ளுகையா லிப்படித் தம்பிரானாருக்கு மீளாவடிமை யானேனென்று மென்னுடைய வுண்மையு மறியப்பெற்றேன், இப்படி முன்னே யறிந் திருக்கிற சிவயோகிகளுக்கு ஏவற்செய்து மவர்கள் திரளிலே சென்றிருக்கவும் பெற்றேன். இனியென்னபெறவேணும். இது பேற்றாலுண்டான நிஷ்பல வேட்கையெனவறிக.

சிந்தையினு மென்றன் சிரத்தினிலுஞ்சேரும்வகை
வந்தவனை மன்னிடகாம வாராமற் - றந்தவனை
மாதினுட னென்றிறமும் வாழ்ந்திருக்க வென்பதல்லா
லேதுசொல்லி வாழ்த்துவே னின்று.

இ - ள். சிந்தை - இன்று. = தன்னுடைய திருவடியான தென்னுடைய தலையினு மிருதயத்தினும் பொருந்தும்படி திரு

மேனிகொண் டெழுநதருளி வந்த தம்பிரானை. பூமியின்கண் ணே நான பிறநதிரஙகாது திரியாதபடி பரமானநதததை யளித தவனை, எப்பொழுதும வாழததுமளவில லெலலைபபடா தாகை யால தனனைவிட்டு நீஙகாத ஞானசததியுடனே யெவவிடத தும வாழநதிருக்கவெனறு சொலலுவ தலலாலவனை யெபபடி வாழ்த்துவேன. இது சிவனைக கூடப்பெற்றவாக ளுணாயுணர் விறநது நினறநுபவிககும தொழிநது மவனுடைய வுணமை யறிநது துதிககவெணணுமளவிலவனுணாயுணாவுங கெட்டாத வனெனற விடமறிவிததது (௱)

ஆதார மாகி யருளோடு நிறகின்ற
சூதானி வினபச சுகவடிவை - யோதாம
லுளளவாகள் கூடி யுணாவொழிய நிறபதலால
தெளளவா ராதே சிவம.

திருக்களிறறுப்படியார மூலமுமுரையும் முற்றிறறு.

திருசசிறறமபலம.

தனியன்.

சேடன் படிபுரககுங் தென்கடவூ ருய்யவந்தான்
பாடுங் களிறறுப படிதனககு - நீடிமையோர்
தேடும புகழ்சசெஞசொற சிவபபிரகாசன திருந்த
காடியுரை காட்டா நயநது.